நம் வழி வேளாண்மை

பருவம் 29 ஜனவரி – மார்ச் 2020 இதழ் 4

மரவள்ளிகிழங்கு அறுவடை இயந்திரம் உருவாக்கிய திரு தன்ராஜுக்கு முதலமைச்சர் விருது
இடம் : தலைவாசல் , சேலம் மாவட்டம் நாள் : 09.02.2020

இயற்கை வழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள் மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை

நம் வழி வேளாண்மை

பருவம் 29 ஜனவரி – மார்ச் 2020 இதழ் 4

ஆசிரியர்
பெ. விவேகானந்தன்

நம் வழி வேளாண்மை தத்துவம்

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் சேகரித்து வைக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் பலரும் பயன் பெற வழி வகுக்கின்றது.

நம்வழி வேளாண்மை குழுமம்
பிற மொழி இதழ்கள்

ஆங்கிலம் – தேனீ (Honey Bee)
குஜராத்தி – லோக் சர்வானி
ஹிந்தி – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி
ஒரியா – அமா அகாபகா
தெலுங்கு – பல்லி ஸ்ருஜானா
கன்னடம் – ஹித்தலகிடா
மலையாளம் – இனிகர்ஷகான்சம்சாரிகட்டே

நம் வழி வேளாண்மை
45, டி.பி.எம். நகர்,
விராட்டிபத்து, மதுரை – 625 016.
தொலை பேசி : 0452– 2380082, 2380943.
இமெயில் vivekseva@gmail.com

ஆங்கில இதழ் முகவரி
Prof. Anil Gupta,
Honey Bee,
SRISTI, AES Boys Hostel Campus,
Near Gujarat University Library & SBI Bank,
Navrangpura, Ahmedabad-380 009, Gujarat,
email: honeybee@sristi.org

இயற்கை வேளாண்மைக்கு உறுதுணை அளிக்கும் இக்கால பழமொழிகள்

1. வெளி இடுபொருளில்லா வேளாண்மை
இந்தியா நாட்டு மேலாண்மை
(அப்துல்கலாமின் இந்திய வல்லரசாகும் கனவு வேளாண்மையில் கைகூடும்)

2. ஆட்டிபடைப்பான் தொழிலாளி
கேட்டு நடப்பான் வயலாளி

3. மண்ணுக்கு சுத்தி (சக்தி) சாணம்
மனித சரீர சுத்தி கோமியம்

4. விளைந்ததை அப்படியே விற்றால் விவசாயிக்கு கட்டாது; மதிப்பு கூட்டி விற்றால் விவசாயம் நட்டமாகாது

5. தக்கைப்பூடு மண்ணுக்கு
சக்கைபோடு கரும்புக்கு

6. மரம் வளர்ப்பு பிற்கால பணவங்கி
இதுவே மழைநீர் சேகரிப்பு கிட்டங்கி

7. மரத்தால் பொழியும் மழைநீர்
மழைக்குப்பின் ஊற்றாய் பெருகும் நீர்

8. இயற்கை உணவே அருமருந்து – இதுவே
இல்லத்தில் தரும் பெரு விருந்து

9. இல்லத்திற்கு லட்சுமி மனைவி
வேளாண்மைக்கு லட்சுமி பசு

10. வீட்டில் எதிர்ப்பு, இயற்கை வழிக்கு மறுப்பு
நாட்டில் புரட்சி முடிவில் எல்லோர்க்கும் மகிழ்ச்சி .

(16.2.2020 அன்று தென்காசி மாவட்டம், புளியங்குடியில் திரு அந்தோணிசாமி தோட்டத்தில் நடந்த இயற்கை வேளாண்மை கூட்டத்தில் திரு அந்தோணிசாமி தனது அனுபவத்தில் கூறப்பட்ட கருத்துக்கள் பழமொழி உருவில் கொடுக்கப்பட்டுள்ளன).

நெல்லி சாகுபடி உத்தமம்
சொல்லும் பாலுவின் உத்திகள் மகத்துவம்



நெல்லி மரம் இயற்கை அளித்த ஓர் அரிய படைப்பு. நெல்லிக்கனி ஓர் அருமருந்து . ஓர் அமிர்தம். இது ஊட்டச்சத்து மிக்க உணவாகும். இதனை சாகுபடி செய்பவருக்கு நிச்சியம் புண்ணியம் கிடைக்கும். இந்த நெல்லியின் மகத்துவத்தை மேலும் உயர்த்த இயற்கை வழியில் சாகுபடி செய்து சமுதாயத்திற்கு அர்பணிக்கும் திரு.பாலசுப்ரமணியத்தின் செயல் போற்றுவதற்குரியது. ஈரோடு மாவட்டம், சிவகிரி அருகே கொக்கிரிகாட்டுபுதூர் அருகே கானியம்பாளையத்தில் திரு. பாலசுப்ரமணியம் (வயது 59) எஸ்.எஸ்.எல்.சி வரை படித்து விட்டு வேளாண்மை செய்து வருகிறார். இவருக்கு சொந்தமாக சுமார் 10 ஏக்கர் நிலமும் இதில் 2 கிணறுகளும் உள்ளன. இவருக்கு 2 பிள்ளைகள். இருவரும் இன்ஜினியரிங் படித்து விட்டனர். திருமணம் ஆகி விட்டன. தற்பொழுது மனைவியுடன் சேர்ந்து பண்ணையிலேயே வீடுகட்டி பண்ணையை பராமரித்து வருகிறார்கள். இயற்கை வேளாண்மைக்கு இவரிடமுள்ள 2 காங்கேய பசுக்களும் பேருதவியாய் உள்ளன. இவைகளிடமிருந்து சாணம், கோமியம், பால், நெய் எடுத்து பஞ்சகவ்யா, ஜீவாமிருதம் இயற்கை பூச்சி மருந்து தயார் செய்கிறார்.

நெல்லி சாகுபடி

இவர் பவானிசாகர் (பி.எஸ்.ஆர்) காஞ்சன், என்.ஏ. 7 போன்ற பல நெல்லி இரகங்களை ஒட்டுக்கன்றுகளாக தருவித்து நட்டுள்ளார். இடைவெளி 12 x 12 அடி. ஏக்கருக்கு சுமார் 200 மரங்கள். நெல்லியை கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக சாகுபடி செய்து வருகிறார். முதலில் நெல் சாகுபடியில் விதைக்காக சாகுபடி செய்து வந்தார். விதை நெல் சாகுபடியை விட்டு நெல்லி 2 ஏக்கரில் பயிர் செய்துள்ளார். நெல்லி வருடத்தில் 2 முறை மே மாதம், செப்டம்பர் மாதம்

காய்க்கும். நவம்பர், டிசம்பர், ஜனவரி, பிப்ரவரியில் குளிர்காலமாதலால் நீர் பாய்ச்சக்கூடாது. பின்னர் மாசி மாதம் தொடங்கி 4 நாட்களுக்கு ஒரு முறை சொட்டு நீர் பாசனம் மூலம் நீர் பாய்ச்சுகிறார். வருடத்திற்கு ஒரு முறை கலப்பு பிண்ணாக்கு மரம் ஒன்றிற்கு 1/2 கிலோ இத்துடன் குப்பை 1 கூடை வைக்கிறார். இது மாசி, பங்குயினியில் நீர்பாய்ச்சப்படும் சமயம் தரப்படுகிறது. பிண்ணாக்கு கலவையில் கடலைபிண்ணாக்கு, கொட்டைபிண்ணாக்கு, எள்ளு பிண்ணாக்கு, வேப்பபிண்ணாக்கு, தேங்காய் பிண்ணாக்கு என 5 வகை சேர்த்து தூளாகக் கடைகளில் விற்கப்படுகிறது. இதனை விலைக்கு வாங்கி வந்து நெல்லி, வாழை, தென்னை மரங்களுக்கு கொடுக்கிறார். இந்த கலப்பு பிண்ணாக்கு உரம் வைப்பதால் போதிய சத்துக்கள். விரைவாக இல்லாமல் நிதானமாகக் கிடைத்து விடும். நெல்லிக்கு ஊட்டச்சத்து கிடைக்க பஞ்சகவ்யா , இயற்கை பூச்சி கொல்லி மருந்து 15 நாட்களுக்கு ஒரு முறை தெளிக்கிறார். அதாவது முதல் தெளிப்பு பஞ்சகவ்யா என்றால் 2 வது தெளிப்பு மூலிகை பூச்சி விரட்டி தெளிக்கிறார். தேன் ஒழுகல் நோய்க்கு மைதாமாவை நீரில் கலந்து (10 லிட்டர் நீருக்கு 1/2 கிலோ) தெளிப்பதால் பூச்சிகளை காம்பிலேயே அப்பி பிடித்து இறுக்கி விடும். இதனால் இந்த நோயின் வேகம் குறையும். பஞ்சகவ்யா, மூலிகை பூச்சி விரட்டி தெளிப்பது மாசியிலிருந்து (மார்ச் மாதத்திலிருந்து) செயது வர வேண்டும். அடுத்து ஜூலை, ஆகஸ்டில் தெளிப்பதை கடைபிடிக்க வேண்டும். இது பூ பூத்து காய் எடுக்கும் சமயமாகும்.

நெல்லி மகசூல்

நன்கு காய் எடுத்த பின் அறுவடைக்கு தயாராகும். மரம் ஒன்றிற்கு 20 கிலோ கிடைத்தாலும் கிலோ

ரூ. 50க்கு விற்றாலும் ரூ. 1000 கிடைக்கும். ஓர் ஏக்கரில் 200 மரங்களிலிருந்து சுமார் 2 லட்சம் கிடைக்கும். களையெடுப்பு, மருந்து அடித்தல், உரம் வைக்க (பிண்ணாக்கு) இவைகளுக்கு சுமார் ரூ.50,000 போக ரூ.1/1/2 லட்சம் நிகரலாம் கிடைக்கிறது.

நெல்லி ஜூஸ்

இரண்டு நெல்லிக்காயை சிறு துண்டுகளாக நறுக்கி 2 பேரீச்சம் பழங்களை (கொட்டையை எடுத்தது) எடுத்து கொள்ள வேண்டும். பின்னர் ஓர் ஏலக்காய் சிறிது வெல்லம் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவைகளை மிக்சியில் அரைத்து 3 டம்ளர் நீர் சேர்த்து பழச்சாறு போன்று ஜூஸ் சாப்பிடலாம். இதனை நித்தமும் காலையில் அருந்தி வர உடம்பு சுத்தப்படும்.

நெல்லிக்காய் சீகைக்காய்

சீகைக்காயில் பல பொருட்கள் சேர்த்து அரைக்கும் சமயம் 1 கிலோவிற்கு சுமார் 100 கிராம் நெல்லி வத்தல் சேர்த்து அரைக்கலாம். இதனால் உடம்பிற்கு குளிர்ச்சி ஏற்படும். உஷ்ணத்தால் வரும் இளநரை கூட மாற வாய்ப்புண்டு.

இயற்கை நெல்லி கெடாமலிருத்தல்

மரத்திலிருந்து பறித்த நெல்லிக்காய் 2 நாட்களில் வாடி வதங்கி விடும். ஆனால் இயற்கை வேளாண்மையில் விளைந்தன ஒரு வாரம் வரை வாடாமலிருக்கும்.

நெல்லியில் காவாத்து

காய்க்கும் நெல்லி மரக்கிளைகள் படர்ந்து உயரமாக வளரும். இதனால் நெல்லி காய்களை பறிப்பதும் கடினமாகும். இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நெல்லியை சுமார் 5 அடி உயரத்தில் கிளைகளை வெட்டி விட்டால் பக்க வாட்டு கிளைகள் அதிகம் தோன்றி காய்ப்பும் அதிகரிக்கும். காவாத்து செய்வதை டிசம்பர் மாதத்தில் செய்ய வேண்டும்.

நெல்லிக்கு உரம்

நெல்லிமரம் பூ பூக்க ஆரம்பித்தவுடன் பஞ்சகவ்யாவையும், மூலிகை பூச்சி விரட்டியையும் மாறி மாறி 15 நாட்களுக்கு ஒரு தடவை தெளிக்க வேண்டும். தூறில் 20 நாட்களுக்கு ஒரு தடவை ஜீவாமிருதக் கரைசல் 1/2 லிட்டர் ஊற்ற வேண்டும்.

ஜீவாமிருதக் கரைசல் தயாரித்தல்

நாட்டு மாட்டு சாணம் – 5 கிலோ, கோமியம் – 5 லிட்டர், பயறுமாவு – 1/4 கிலோ, சர்க்கரை – 1/4 கிலோ சேர்த்து 1 டிரம்மில் வைத்து 3 நாட்கள் புளிக்க விட வேண்டும். இதிலிருந்து 1 லிட்டர் எடுத்து 20 லிட்டர் நீரில் நிரப்பி வாய்காலில் கலந்து விடலாம். ஓர் ஏக்கருக்கு 10 லிட்டர் ஜீவாமிருதக் கரைசல் தேவைப்படும். நாட்டுச்சாணம், கோமியம் கிடைக்க 2 நாட்டு காங்கேயப் பசுக்களை பாலசுப்பிரமணியன் பராமரித்து வருகிறார்.

பஞ்சகவ்யா தயார் செய்தல்

பஞ்சகவ்யாவின் மகிமையை இவரது ஊருக்கு அருகாமையில் கொடுமுடி நடராஜன் அவர்கள் ஏற்பாடு செய்த கூட்டத்தில் அறிந்து கொண்டார். அந்த கூட்டத்தில் இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வாரும் கலந்து கொண்டார். பின்னர் இவரது பண்ணைக்கு வருகை தந்த மூலிகை பூச்சி விரட்டி தயாரிப்பாளர் செல்லமுத்து மூலமும் தயாரிப்பு விவரங்களை அறிந்து கொண்டார். தற்சமயம் கீழ்கண்டமுறையில் பஞ்சகவ்யம் தயார் செய்து பயன்படுத்தி வருகிறார். நாட்டு மாட்டு சாணம் 5 கிலோ, கோமியம் 5 லிட்டர், இளநீர் 3 லிட்டர், பால் 2 லிட்டர், தயிர் 2 லிட்டர், நெய் 1 லிட்டர், வாழைப்பழம் 12 , கரும்புசாறு 3 லிட்டர். முதலில் சாணம், நெய் சேர்த்து பிசைந்து 2 நாட்கள் அப்படியே நிழலில் வைக்க வேண்டும். மூன்றாவது நாளில் பிற பொருட்கள் சேர்த்து கலந்து விட வேண்டும். இந்த கலவையை 3 வாரங்கள் புளிக்க விட வேண்டும். நித்தம் 2 முறை கலக்கிவிட வேண்டும். இதனை 1/2 லிட்டர் எடுத்து 10 லிட்டர் நீரில் கலந்து பயிருக்கு (நெல்லிக்கு) தெளித்து வர வேண்டும். தென்னைக்கு ஜீவாமிருதம் 15 நாட்களுக்கு 1 தடவை தூறில் 1/2 லிட்டர் ஊற்ற வேண்டும்.

தென்னையைச் சுற்றி சுமார் 6 அடி விட்டத்தில் 1/2 அடி ஆழத்தில் வட்டமாகப் பாத்தி அமைத்து அதில் காய்ந்த சருகு, குப்பை இட்டு ஜீவாமிருதம் ஊற்றி வர வேண்டும். இதனால் சருகு மக்கி உரமாகிவிடும். மண்புழுக்களும் இந்த வட்ட பாத்தியில் தோன்றி மண்வளத்தைக் கூட்டும்.

மூலிகை பூச்சி விரட்டி தயாரித்தல்

சோற்றுக்கற்றாழை, வேப்பங்கொட்டை, எருக்களை , நொச்சி, ஆடாதொடை, மத்தாளப்பூண்டு (உன்னிச் செடி என்ற லண்டானா) ஒவ்வொன்று சம அளவு அரைத்து எடுத்த சாற்றை 250 மி.லிக்கு 10 லிட்டர் நீர் சேர்த்து பயிருக்கு தெளிக்க வேண்டும்.

நெல்லியின் மகத்துவம்

நெல்லிமரத்தின் கனியை (உலர்ந்தது) யாகத்திலும், பித்ரு பூஜையிலும் பிராமணர்கள் சேர்த்து கொள்கின்றனர். கார்திகை மாதம் சுக்லபட்சம் (தேய்பிறை) நவமியில் நெல்லி மரத்திற்கு ஊதுபத்தி பொருத்தி, துளசி நீர் வைத்து வணங்குவதால் பெருமாள் (விஷ்ணு) அருள் கிடைப்பதாகக் கூறுகின்றனர். இதேபோல் மாசி பௌர்ணமிக்கு முந்திய ஏகாதேசியில் (நெல்லி ஏகாதேசி) விரதமிருந்து நெல்லி மரத்தை வணங்குவது விசேஷம் என்று கூறுகின்றனர். லட்சுமி தேவி, பிரம்மா, பார்வதி தேவி இவர்கள் இறைவனை நினைத்து விட்ட கண்ணீர் நெல்லி மரமாக வளர்ந்ததாகக் கருதுகின்றனர். நெல்லியை ஞாயிறு மற்றும் இரவு வேளை தவிர மற்ற நாட்களில் உண்பது உகந்தது என கூறப்படுகிறது. இப்பேற்பட்ட மகத்துவம் வாய்ந்த நெல்லியை வளர்ப்பேருக்கும் நல்ல பலன் உண்டு என்றால் அது மிகையாகாது.

கே. என். பாலசுப்பிரமணி
த/பெ நல்லசாமிக்கவுண்டர்
காணியம்பாளையம், காகம் அஞ்சல்
சிவகிரி வழி, மொடக்குறிச்சி தாலுகா
ஈரோடு மாவட்டம், செல் : 9751169086
தொகுப்பு : பெ விவேகானந்தன், சேவா

பாப்புவின் மூலிகை வைத்யம்

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தாலுகா, இருக்கன்துறை கிராமத்தில் திருமதி பாப்பு (வயது 60) வசித்து வருகிறார். இவரது மூலிகை வைத்யம் பின்வருமாறு.

சளிக்கு

ஆடாதொடை, கண்டங்கத்திரி, தூதுவளை, சுக்கு துண்டு, மஞ்சள் தூள், நல்ல மிளகு, வெள்ளப்பூடு அரிசி (பல்) போன்றவற்றை நீரில் காய்ச்ச வேண்டும். ஆடாதொடையை பிளிந்து சாறு எடுக்க வேண்டும். தேனை காய்ச்சி அதனுடன் ஆடாதொடை சாறை கலந்து கொள்ள வேண்டும். அனைத்தையும் சேர்த்து இளப்பு இருமலுக்கும் கொடுக்கலாம்.

ஆட்டு புண்ணுக்கு

ஆடுதிண்ணாபாளை சாறு எடுத்து அதனுடன் தேங்காய் எண்ணெய் காய்ச்சி ஆட்டு புண் மேல் தடவ வேண்டும்.

சில்லாட்ட கரப்பானுக்கு

கருக்குவா இலையுடன், கருஞ்சீரகம் மற்றும் தேங்காய் எண்ணெய்யை காய்ச்சி நோய் வந்த இடத்தில் தடவி வர வேண்டும்.

சிரங்குக்கு

குப்பை மேனியுடன், கருநெல் தவிடு அதனுடன் உப்பு சேர்த்து அதனை உடம்பில் தேய்த்து வர வேண்டும். சாம்பிராணி புகை காட்டினாலும் சிரங்கு குணமாகி விடும்.

பேனுக்கு

குளித்த பின் தேங்காய் எண்ணெய் தேய்த்து வர பேன்கள் உதிர்த்து விடும்.

கழிச்சலுக்கு

ஆட்டிற்கு புளிய இலையை அரைத்து கொடுக்க கழிச்சல் குணமாகும்.

ஆட்டு வாய்ப்புண்ணிற்கு

உப்பையும், புளியையும் கட்டியாக சேர்த்து பிணைந்து ஆட்டின் வாய் மேல் பூசி வர வாய்ப் புண் குணமாகும்.

குருத்து பூச்சி தின்றால்

மாடு சோளப்பயிர் தின்று சொக்கினால் மிளகாய் பழத்தை அரைத்து நீரில் கலந்து கொட்டன் மூலம் மாட்டின் வாய்க்குள் விடவேண்டும். ஆட்டிற்கு ஆமணக்கு இலையினால் சொக்கல் ஏற்பட்டால் மிளகாய் பழத்தை அரைத்து நீரில் கலந்து கொடுக்க வேண்டும்.

பாப்பு
இருக்கன்துறை,
ராதாபுரம் தாலுகா
திருநெல்வேலி மாவட்டம்

குருசாமியின் கால்நடை வைத்யம்

திருநெல்வேலி மாவட்டம், கூடன் குளம், அருகே இருக்கந்துறை கிராமத்தில் திரு. குருசாமிநடார் (வயது 81) வசித்து வருகிறார். இவர் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக கால்நடை வைத்யம் செய்கிறார்.

மாடு செறுமலுக்கு

கல்மூங்கில் சாறு உள்ளே தர வேண்டும். கல் மூங்கில் இலை சற்று அகலமாக நீண்டு இருக்கும்.

குடற்புழுவிற்கு

மாட்டிற்கு 100 மி.லி, ஆட்டிற்கு 50 மி.லி வேப்ப எண்ணெயுடன் உள்ளே கொடுக்க வேண்டும்.

சினைபிடிக்க

சினைக்கு போட்ட பின் 300 மி.லி வேப்ப எண்ணெயுடன் 4 முட்டை கலந்து 2 தடவை வாய் உள்ளே கொடுக்க வேண்டும்.

உன்னிக்கு

வேப்பஎண்ணெயுடன் சூடம் கலந்து மேலே பூச வேண்டும். 1/2 லிட்டர் வேப்பெண்ணெய்க்கு 10 சூடம் போட்டு தடவ வேண்டும்.

கோழி கழிச்சலுக்கு

வாரத்திற்கு ஒரு தடவை சின்ன வெங்காயம் நறுக்கி கொடுக்க வேண்டும்.

குருசாமி நாடார்

கஸ்பா மேலத் தெரு, இருக்கன்துறை

கூடன்குளம் வழி, இராதபுரம் தாலுகா

திருநெல்வேலி மாவட்டம்

சம்சன்மஹரிபாவின் கால்நடை வைத்யம்

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தாலுகா ராவுத்தன்வயலில் சம்சன்மஹரிபா (வயது 48) வசித்து வருகிறார். இவர் 5ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவர் தனது வீட்டு கால்நடைகளுக்கு தானே மூலிகை வைத்தியம் செய்து வருகிறார். இந்த வைத்தியத்தை தனது தாத்தாவிடமிருந்து கற்றுக் கொண்டார்.

கோமாரி நோய்க்கு

நோய் பாதிக்கப்பட்ட மாட்டின் காலில் உப்பு கலந்த நீரால் கழுவி விட வேண்டும். தினமும் காலையில் வாழைப்பழத்தை உள்ளுக்கு கொடுக்க வேண்டும். தொடர்ந்து 3 நாள் கொடுத்து வர கோமாரி நோய் குணமாகிவிடும்.

காய்ச்சலுக்கு

காய்ச்சல் கண்ட மாட்டிற்கு வேப்பங்கொட்டை, சாம்பிராணி புகை மூட்டம் போட்டால் காய்ச்சல் குணமாகிவிடும்.

வயிறு உப்பிசத்திற்கு

ஆட்டிற்கு 3 வெற்றிலை, மாட்டிற்கு 5 வெற்றிலை, ஓமம் 20 கிராம் மேற்கண்டவைகளை அரைத்து உள்ளுக்கு கொடுக்க வேண்டும்.

மாடு சினைப்பிடிக்க

கொண்டைகடலையை 1/4 கிலோ முளைக்கட்ட வைத்து தினமும் காலையில் உள்ளுக்கு கொடுக்க வேண்டும். தொடர்ந்து கொடுத்து வர மாடு பருவத்திற்கு வந்து விடும். பின்பு சினை ஊசி போட்ட பின் மாடு சினைபிடிக்கும்.

ஏ. சம்சன்மஹரிபா

க/பெ. அப்துல்காலம், இ.சி.ஆர். ரோடு

இராவுத்தன்வயல், அம்மனிசத்திரம், பேராவூரணி தாலுகா

தஞ்சாவூர் மாவட்டம்

நவீன கைத்தறி

இந்த தறி இண்டியன் ஹேண்ட்லூம் அதாவது மோடி ஹேண்ட்லும் என்று இந்த நவீன கைத்தறியின் பெயராகும். (எம். மல்டிபில் ஓ. ஆஃப்ரேட்டிங் டி. டிராபாக்ஸ் இ. இந்தியா). இந்த நவீன தறியானது நியூமேட்டிக்ஸ் சிலிண்டர் மற்றும் ஏர்கம்ப்ரஷர் மூலமாக மிகவும் எளிதாக இயங்கும். குறிப்பாக இந்த நவீன தறியில் ஜக்கார்டை இயக்க ஒன்று நாடா பாக்ஸ் தூக்க ஒன்று தறியை இயக்க இரண்டு மேலும் நாடாவை தட்டிவிட இரண்டு என மொத்தம் 6 நியூமேட்டிக் சிலிண்டர்கள் பொருத்திக் கொள்ளலாம். மேலும் இந்த நவீன தறி முற்றிலும் தானாகவே இயங்கும். குறிப்பாக இந்த நவீன தறியில் உற்பத்தி செய்யும் பட்டுச்சேலை கைத்தறி சேலையை போலவே மிகவும் தரமாக இருக்கும். காரணம் இந்த நவீன தறியில் காஞ்சிபுரம் தட்டு பண்ணையை பயன்படுத்தி நெசவு செய்யலாம். இதனால் பட்டுச்சேலையின் தரத்தை காப்பாற்ற முடியும். மேலும் இந்த நவீன தறியில் நெசவு செய்யும் நெசவாளிக்கு நாள் ஒன்றுக்கு சுமார் ரூ. 2000 வருமானம் கிடைக்கும் என்பது ஒரு சிறப்பு எனலாம்.

மேலும் இந்த நவீன தறியில் இரண்டு நாடா ரகமான ஃபுல் செல்ப் சேலையை இரண்டு நாளில் உற்பத்தி செய்தால் அதற்கு கிடைக்கும் கூலி ரூ. 4,000. இதுவே கைத்தறியில் இந்த சேலையை ஐந்து நாட்கள் நெசவு செய்ய வேண்டும். மேலும் அந்த கைத்தறி நெசவாளி ஒரு சேலையை நெசவு செய்ய சுமார் பத்தாயிரத்திற்கும் அதிகமான முறை எடை

அனைவரும் காணலாம். இதற்கு மாற்றாகவே இந்த நவீன கைத்தறியை கண்டுபிடித்தோம்.

சண்முகசுந்தரம், எஸ்.எஸ். என்டர் பிரைசஸ்
ஏரிக்கொடி, நெய்காரபட்டி, சேலம் – 636010
செல் – 9043198301

நாய் கடிக்கு மூலிகை வைத்யம்

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தாலுகா ராவுத்தன்வயலில் லெட்சுமி (வயது 40) வசித்து வருகிறார். இவர் 5ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். இவர் தனது வீட்டு கால்நடைகளுக்கு தானே மூலிகை வைத்தியம் செய்து வருகிறார். இந்த வைத்தியத்தை தனது மாமனார் மாமியாரிடமிருந்து கற்றுகொண்டார். முதலில் நாய் கடித்த இடத்தை சுண்ணாம்பு தடவி விட வேண்டும். பின்பு மஞ்சள், உப்பு, புளியங்கொட்டை போட்டு சுட வைத்த தண்ணீரால் கழுவிவிட வேண்டும். பின்பு ஊமத்தை இலையை அரைத்து கடித்த இடத்தில் தடவி பின்பு அந்த இடத்தில் சூடு வைக்க வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் நாய்கடி குணமாகும்.

ஆர். லெட்சுமி
க/பெ ரமேஷ், புதுத்தெரு, மறவன் வயல்
இராவுத்தன்வயல். அம்மனிசத்திரம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

தமிழகமும் சேர்க்கப்பட வேண்டும்

அடல் நிலத்தடி நீர்த் திட்டம் (அடல் பூஜல் யோஜனா) என்கிற பெயரிலான திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ரூ. 6,000 கோடி ஒதுக்கீட்டை அங்கீகரித்திருக்கிறது. அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் நிலத்தடி நீரை மேம்படுத்துவது, நீர்ப்பயனாளர்கள் அமைப்புகளை வலுப்படுத்துவது, நிலத்தடி நீர்ப் பயன்பாடு குறித்த புள்ளிவிவரங்களை மாநில அரசுகள் சேகரிக்க உதவுவது, தண்ணீர்ப் பாதுகாப்புத் திட்டங்களுக்கான வழிமுறைகளை உருவாக்குவது, குறைந்து வரும் நிலத்தடி நீரை அதிகரிப்பதற்கான வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவது போன்றவை உறுதிப்படுத்தப்பட இருக்கின்றன. விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்குவதும், நிலத்தடி நிர் மேலாண்மையை மக்களின் பங்களிப்புடன் உருவாக்குவதும் இந்தத் திட்டத்தின் அடிப்படை நோக்கங்கள். இந்தியாவின் மொத்தப் பாசனத் தேவையில் 65 சதவிகிதம் நிலத்தடி நீரின் மூலம்தான் பெறப்படுகிறது. கிராமப்புறக் குடிநீர்த் திட்டங்களின் 85 சதவிகிதத் தேவை, நிலத்தடி நீரின் மூலம்தான் பூர்த்தி செய்யப்படுகிறது.

இந்தப் பின்னணியில்தான் அடல் நிலத்தடி நீர்த் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. குஜராத், ஹரியானா, கர்நாடகா, மத்தியப்பிரதேசம் ஆகிய 7 மாநிலங்கள் இத்திட்டத்தால் பயன்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் தமிழகம் இணைக்கப்படவில்லை என்பது வேதனைக்குரியது. உண்மையில் சுற்றிலும் எல்லா அண்டை மாநிலங்களுடனும் நதிநீரிப் பங்கீட்டில் பிரச்சனையை சந்திக்கும் தமிழகத்துக்குத் தான் நிலத்தடி நீரின் தேவை மிக அதிகம்.

தமிழகத்தில் ஏறக்குறைய பாதி இடங்களில் நிலத்தடி நீரானது உப்புத் தன்மை கொண்டதாகவும், ஃப்ளூரைட் உள்ளிட்ட வேதிப்பொருட்கள் மிகுந்ததாகவும் பயன்படுத்தக் தகுதியற்றதாக மாறிவருகிறது. 2018 ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் 2019 ஆம் ஆண்டு ஆகஸ்டு வரை நிலத்தடி நீர் மட்டத்தில் ஏற்பட்ட ஏற்ற, இறக்கம் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது தமிழகத்தில் எதிர்காலத்தில் நிலத்தடி நீர் இல்லாமல் போகும் சூழல் உருவாகும். ஆனால் அக்டோபரில் தொடங்கிய வடகிழக்குப் பருவமழையால் தமிழகத்தில் நிலத்தடி நீர் மட்டம் 32 மாவட்டங்களிலும் அதிகரித்தது. இந்த ஏற்ற இறக்கங்களை முறைப்படுத்துதல் அவசியம். அதற்குத் தமிழகமும் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும். அதே சமயம், இதற்காகக் காத்துக் கொண்டு இருக்காமல், தமிழக அரசு தாமாக முன்வந்து தன்னார்வ நிறுவனங்கள், மக்கள் அமைப்புகளுடன் இணைந்து ஒவ்வொரு பஞ்சாயத்து அளவிலும் தண்ணீர்ப் பட்ஜட், மேற்பரப்பு நீராதார மேம்பாடு, மழை நீர்ச் சேகரிப்பு முறைகள் மேற்கொண்டு நீண்டகால இலக்குடன் நீர்வளத்தைத் தேவைக்குத் தகுந்தவகையில் பயன்படுத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

நன்றி– நமது மண்வாசம், மலர் – 5, வாசம்– 6,

மோகனகிருஷ்ணனின் தாவரத்தோட்டம்

பெரம்பலூர் மாவட்டம், துறையூர் அருகே டி. களத்தூர் கிராமத்தில் மோகனகிருஷ்ணன் கடந்த 25 வருடங்களாக பல வகையான தாவரங்கள், மூலிகை செடிகள் போன்றவற்றை தனது தோட்டத்தில் வைத்து பாதுகாத்து வருகிறார். இவருக்கு உறுதுணையாக இவருடைய குமாரர் மகேந்திரன் முழு ஈடுபாட்டுடன் இந்த பண்ணையை பராமரித்து வருகிறார். இவருடைய முயற்சியினால் இப்பண்ணையில் நாட்டு காங்கரேஜ் பசுக்களும், கோழி, பறவைகளும் வளர்க்கப்படுகின்றன. இந்த தோட்டம் முழுவதும் இயற்கையாக எந்த இரசாயன இடுபொருள் இல்லாமல் பராமரிக்கப்படுகின்றது.

இங்கு காணப்படும் அரிய வகை தாவரங்கள் பின்வருமாறு

ஆகாச வள்ளி கிழங்கு

இது கொடியிலும் காய்க்கும், வேரிலும் காய்க்கும். இதனை காய்கறியாக சமையல் செய்து சாப்பிடலாம்.

அசோக மரம்

இதன் பட்டை பெண்களின் கர்ப்பப்பை வளர்ச்சிக்கு உகந்தது.

கருந்துவரை

இது உறுதியான தண்டினை கொண்ட குற்று மரம். இதனை வைத்து மண் வெட்டி கணை, கைப்பிடி செய்வார்கள்.

மின்ன தழை மரம்

இதன் இலையை கீரையாக ஏகாதசி விரதம் முடிந்தபின் துவாதசியில் சாம்பாரில் சேர்த்து சமைக்கலாம்.

பெருங்குறிஞ்சான்

இந்த கீரையை சர்க்கரை சத்து உள்ளவர்களும், எய்ட்ஸ் நோய் உள்ளவர்களும் சாப்பிட்டு பயன் அடைந்துள்ளனர்.

செப்பு நெருஞ்சி

இது தரையோடு படர்ந்துள்ள செடி. பூ இலேசான சிவப்பு நிறத்தில் காணப்படும். இதனை செருப்படி தழையுடன் அரைத்து புண்ணில் வைத்து கட்டலாம். நிவாரணம் கிடைக்கும்.

பாலக்கொடி

இதனை நசுக்கி முகர்ந்து பார்த்தால் தும்மல் வரும். இது மிக அரிதான மூலிகை செடி. இது படர்ந்து தடிமன் பெற்று வலுவான கொடியாக வளர்ந்துள்ளது. இதனை அரைத்து சாப்பிட தாய்மார்களுக்கு பால் நன்கு சுரக்கும். இது டானிக்குகளில் பயன்படுத்தப்படுகிறது.

காசிவில்வம், மஹாவில்வம், சர்க்கரை வில்வம் இந்த மூன்று மரங்களும் இங்கே உள்ளன. இலுப்பை, சேராங்கொட்டை, பீடிஇலை, கருங்கொன்றை, முள்அரசன், அழிஞ்சில், புண்ணை, வன்னி, வம்மறை, சிறுதேக்கு, பூந்திகொட்டை, கொடாம்புலி, முள்சீத்தா, மரவள்ளி மரம், புரங்கைநாரி, கொட்டை தேங்காய், காட்டு மாங்காய் (மாவடு தயாரிக்க சிறந்தது), பச்சைகிலுவை மரம், உசிலை, எட்டி, முள்வேங்கை போன்ற அரிய மரங்களை பல இடங்களிலிருந்தும் பச்சை மலையிலிருந்தும் தருவித்து நட்டு பாதுகாத்து வருகிறார்.

ஆறாத புண்ணுக்கு

புங்க மரத்தினுடைய வேரினை சீவி அரைத்து புண்ணுக்கு போட்டால் ஆறாத புண்ணும் குணமாகும். 'புரையேறிய புண்ணுக்கு புங்கை பட்டை சாறு' என்பது பழமொழி.

கசக்கும் கோமியம்

இவருடைய பண்ணையில் பராமரிக்கப்படும் 4 நாட்டு பசுக்கள் (காங்ரேஜ்) தன்னிச்சையாக மேய்கின்றன. இம்மாடுகள் வேம்பு உள்பட பலவகையான புற்கள், தாவரங்களை மேய்வதால் இம்மாடுகளின் கோமியம் கசப்பு தன்மையுடன் உள்ளது. எனவே இது மருத்துவகுணம் கொண்டதாக உள்ளது. இதனை காலையில் வெறும் வயிற்றில் 100 மி.லி அருந்தி பலன் பெறலாம். இந்த முறையில் அந்தோணிசாமி

குடும்பத்தில் சர்க்கரை சத்துக்கு நல்ல பலன் கிடைத்ததாகக் கூறப்படுகிறது.

கால்நடை மூலிகை வைத்ய கூட்டம்

பிப்ரவரி மாதம் 9ம் தேதி ஞாயிற்று கிழமை பெரம்பலூர் மாவட்டம், டி. களத்தூரில் மோகனகிருஷ்ணன் தோட்டத்தில் கால்நடை மூலிகை வைத்ய கூட்டம் நடைபெற்றது. இதில் பல்வேறு மாவட்டங்களிலிருந்து 50 நபர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக கால்நடை பல்கலைகழக ஓய்வு பெற்ற பேராசிரியர் டாக்டர் புண்ணிய மூர்த்தி கலந்து கொண்டார். இக்கூட்டத்திற்கு சேவா விவேகானந்தன் முன்னிலை வகித்தார். சேவா மகளிர் குழு உறுப்பினர்கள் மூலம் கால்நடை மூலிகை வைத்ய தயாரிப்புகள் (மசாலா உருண்டை, மத்தான்தைலம்) செய்து காட்டப்பட்டன. 500 வகையான மூலிகை செடிகள், மரங்கள் இந்த தோட்டத்தில் உள்ளதை வந்தவர்கள் பார்வையிட்டனர். இக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு துறையூர் ஓங்கார குடியிலிருந்து திரு செந்தில்குமார் மூலம் மதியம் உணவு வழங்கப்பட்டது. ஈரோடு மூலிகை தாய் தன்னுடைய அனுபவங்களை எடுத்துரைத்தார். இயற்கை விவசாயி திரு மகேந்திரன் எல்லா ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்திருந்தார்.

மோகனகிருஷ்ணன், டி. களத்தூர்,

பெரம்பலூர் மாவட்டம். செல் – 9894401680

ஆடு வளர்ப்பு உத்திகள்

1) 25 பெட்டை ஆடுகளுக்கு 1 கிடா தேவை

2) கிடாவை 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்ற வேண்டும்.

3) மக்காச்சோளம், கம்பு, குருணை – 100 கிராம், தவிடு – 50 கிராம், புண்ணாக்கு – 50 கிராம், வெல்லம் – 50 கிராம் சேர்த்து ஆட்டிற்கு அடர் தீவனம் அளிக்கலாம்.

4) எக்காரணம் கொண்டு அரிசி, மாவு போன்றவற்றை பவுடராக தரக்கூடாது, சாதம் தரக்கூடாது. கொடுத்தால் நிமோனியா வரும்.

5) ஆட்டு தொழுவத்தை 10 லிட்டர் நீரில் 5 மி.லி. பினாயில் ஊற்றி தெளிக்க கிருமிகள் அழியும். இதனை மாதம் ஒருமுறை கடைபிடிக்கலாம்.

6) 2 குட்டிகள் போட்ட தாய் ஆட்டிலிருந்துதான் நல்ல கிடா ஆடு எடுக்க வேண்டும்.

7) வயிறு உப்பிசத்திற்கு ஓமம், சோடா உப்பு சுடுநீரில் கலந்து உள்ளே தரவேண்டும்.

8) மழை காலத்திற்கு முன் தடுப்பூசி E.T (Entrotoxaemea) போட வேண்டும்.

9) பால் தரும் ஆடுகளில் பால் அதிகம் தர ஊற வைத்த கொள்ளு 50 கிராம், தவிடு 50 கிராம் தரவேண்டும்.

10) குட்டிக்கு பால் ஊற்றுவதாக இருந்தால் பசும்பால் 3 மடங்கு, நீர் 1 மடங்கு கலந்து காய்சிய பாலை தரவேண்டும்.

6.2.2020 அன்று புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடியில் நடைபெற்ற ஆடு வளர்ப்பு கருத்தரங்கில் தொகுக்கப்பட்டது

ஊரக அறிவியல் கண்டுபிடிப்பாளர் விருது 2019–20

அறிவியல் நகரம் அனுப்பிய கருத்துருவின் அடிப்படையில் தமிழக அரசு சிறந்த ஊரக அறிவியல் கண்டுபிடிப்பாளர்களுக்கு விருதினை அறிவித்துள்ளது. இதனை தொடர்ந்து மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் 30.5.2018 அன்று கீழ்க்காணும் அறிவிப்பினை வழங்கினார்.

கிராமப்புற மக்களின் அறிவுத் திறனை ஊக்குவித்து பல பயனுள்ள புதிய கண்டுபிடிப்புகளை வெளிக்கொணரும் விதத்தில் இரு சிறந்த ஊரக அறிவியல் கண்டுபிடிப்பாளர்களுக்கு 2018–2019 ஆம் ஆண்டு முதல், ஒவ்வொரு ஆண்டும் தலா ரூ.1,00,000 /– வீதம் ரூ. 2,00,000/– பரிசுத் தெகையாகவும் மற்றும் ரூ. 1.30 இலட்சம் இதர செலவினங்களுக்காகவும் வழங்கப்படும். மொத்த செலவினம் ரூ. 3.60 இலட்சம் ஆகும். இதர செலவினங்களுக்காகவும் வழங்கப்படும் மொத்த செலவினம் ரூ. 3.60 இலட்சம் ஆகும்.

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில் அரசு தனது அரசாணை எண்: 163, உயர்கல்வி (பி2) துறை நாள் 19.7.2018 ன் வாயிலாக இத்திட்டத்தினை அறிவியல் நகரம் நடத்திட அனுமதித்துள்ளது. இதன் அடிப்படையில் இவ்விருதிற்கான முழு விவரம் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

1. ஊரக அறிவியல் கண்டுபிடிப்பாளர்

ஊரக அறிவியல் கண்டுபிடிப்பாளர் என்பவர் ஊரகப் பகுதியை சேர்ந்தவராக இருப்பதோடு அவர்கள் மரபு வழியான தொழில் நுட்ப அறிவாற்ற வேண்டும் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கும் திறன் கொண்டவராக இருக்க வேண்டும். ஊரகம் என்பது ஊராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளைக் குறிக்கும். இது நகராட்சி மற்றும் மாநகராட்சி பகுதிகளுக்கு பொருந்தாது.

2. இத்தகைய விருதுக்கான தேவை:

உலகளாவிய வேளாண்–உணவு முறைகளுக்கு உள்ள எதிர்கால சவால்கள் பெரியது. தட்ப வெப்பநிலை மாற்ற சூழலை எதிர்கொள்வதும், கடுமையான தண்ணீர் பற்றாக்குறையை சமாளிப்பதும். மண் பாழ்படுவதை கையாளுவதும், பூச்சிகள் மற்றும் நோய்களை கட்டுப்படுத்துவதும் போன்ற சவால்களே அவைகள். இத்தகைய சவால்களை எதிர்கொள்ள கிராமப்புறத்தைச் சேர்ந்த மக்கள் தங்கள் மரபு வழி தொழில்நுட்ப அறிவு அடிப்படையில் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கியிருக்கிறார்கள். அத்தகைய கண்டுபிடிப்புகள் ஒரு வழியிலோ அல்லது வேறு வழியிலோ சமூகத்திற்கு உரிய பலனை அளித்திருக்கின்றன. அத்தகைய கண்டுபிடிப்புகள் சமூகப் பார்வைக்கு தெரியாமலே சென்று மறைந்தன. ஆனால் அந்த கண்டுபிடிப்புகளை உரிய முறையில் அங்கீகரிக்க வேண்டும். இத்தகைய அங்கீகாரத்தால், கிராம மக்கள் சமூகத்திற்கு பயனளிக்கக் கூடிய இன்னும் கூடுதலான கண்டுபிடிப்புகளை உருவாக்குவார்கள். கிராமிய மக்களின் பல பகுதியினருக்கு இத்தகைய கண்டுபிடிப்புகள் பலனளித்திருக்கின்றன. அது போன்ற கண்டுபிடிப்புகள் கீழேக் கண்டவாறு.

1. சூரிய சக்தியினால் இயங்கும் கொசு அழிப்பான்
2. நீரின் மீது நடக்கக் கூடிய நடை காலணிகள்
3. துணி துவைத்தல் மற்றும் பயிற்சி இயந்திரம்
4. பருத்தி அறுவடை மற்றும் பருத்தி விதை நீக்கும் இயந்திரம்.

மேற்கூறிய கண்டுபிடிப்புகள் இந்திய ஊரக அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாட்டிலும் இத்தகைய கண்டுபிடிப்புகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவை அரிதாக அறியப்பட்டாலும், உரிய முறையில் அங்கீகரிக்கப்படவில்லை. இவை தனித்தன்மை வாய்ந்ததாகவும், விலை குறைவானதாகவும் மற்றும் சமுதாயத்திற்கு பயனுள்ளதாகவும் காணப்பட்டுள்ளது. எனவே இத்தகைய ஊரக அறிவியல் கண்டுபிடிப்பாளர்களை தமிழ்நாட்டில் அடையாளம் கண்டு அவர்கள் கௌரவிக்கப்பட வேண்டும்.

3. திட்டத்தின் / விருது வழங்குவதன் நோக்கங்கள்

1. கிராமியப் பகுதியிலுள்ள கண்டுபிடிப்பாளர்களை கண்டறிந்து அவர் தம் கண்டுபிடிப்புகளினால் சமுதாயத்திற்கு கிடைக்கப் பெறும் பயன்களை அடிப்படையாகக் கொண்டு அக்கண்டுபிடிப்பாளர்களை கௌரவித்தல்.
2. கிராமப்புற மக்களை, அவர்களது மரபுவழி அறிவு / மரபுவழி அறிவியல்/நாட்டுப்புற அறிவு / உள்ளூர் மீதான அறிவு ஆகியவற்றை உபயோகித்து பல அரிய புதிய கண்டுபிடிப்புகளை வெளிக்கொணர ஊக்குவித்தல். 3. கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களிடையே உள்ள அறிவியல் தளத்தில் உள்ள இடைவெளியை நிரப்புதல்.

4. தேர்வு செய்யும் முறை

அறிவியல் நகரம், மனிதகுலத்திற்கு நன்மையளிக்கும் வகையில் ஊரக புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள்/ மரபுவழி தொழில் நுட்பங்கள் ஆகியவற்றை கண்டறிந்து ஊக்கப்படுத்த மிகப் பெரிய புதிய முயற்சியை மேற்கொள்ளும். அத்தகைய கண்டுபிடிப்புகளுக்கு ஊரக அறிவியல் கண்டுபிடிப்பாளர் விருது வழங்கி கௌரவிக்கப்படும். வெறும் கற்பனையை அடிப்படையாக கொண்ட கொள்கைகள், இன்னும் எண்ண வடிவிலுள்ள கருத்துக்கள் மற்றும் உணர்வு பூர்வமான கருத்துக்கள் ஆகியவை இத்தேர்வுக்கு தகுதியானவை அல்ல. கண்டுபிடிப்பு புதுமையானதாகவும், தற்போதைய நடைமுறையில் உள்ளவற்றில் புதிய தொழில்நுட்பத்தை

அடிப்படையாக கொண்டதாகவும், சமுதாயத்திற்கு பயனளிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். விருதிற்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கும் முன் காப்புரிமை பெற்றிருக்கலாம் அல்லது காப்புரிமைக்கு விண்ணப்பித்திருக்கும் நிலையில் இருக்கலாம். இவ்விருது அறிவுசார்ந்த உடைமை எனும் பட்சத்தில் அந்த புதிய கண்டுபிடிப்புகள் போதிய அளவில் மேம்படுத்தப்பட்டதாகவும் மற்றும் விண்ணப்பதாரர்களுடைய சொந்த கண்டுபிடிப்பாகவும் இருக்க வேண்டும். விண்ணப்பம் சமர்ப்பிக்கும் போது அக்கண்டுபிடிப்பானது ஐந்து ஆண்டிற்கு மேல் பழமையானதாக இருக்கக்கூடாது. இத்தகைய அரிய கண்டுபிடிப்புகளின் விவரங்களை ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் அந்தந்த பல்கலைக்கழகம் மாவட்ட ஆட்சி தலைவர்களிடமிருந்து பெற்று பரிசீலிக்கப்படும். அறிவியல் நகரம், ஊரக கண்டுபிடிப்புகளின் உண்மை தன்மை மற்றும் சமுதாயத்திற்கு அவற்றினால் ஏற்படும் பயன்களை மதிப்பீடு செய்ய வல்லுநர் குழுவினை அமைக்கும். தேர்வு செய்யப்பட்ட கண்டுபிடிப்புகள், அறிவியல் நகரத்தின் அறிவியல் விழாவில் பொது மக்களின் பார்வைக்குக் காட்சி பொருளாக வைக்கப்படும். அந்த கண்டுபிடிப்பாளருக்கு ஊரக அறிவியல் கண்டுபிடிப்பாளர் விருது அளிக்கப்படும். ஒவ்வொரு ஆண்டும் இரண்டு சிறந்த ஊரக அறிவியல் கண்டுபிடிப்புகள் இவ்விருதிற்கு தேர்வு செய்யப்படும்.

5. விருதுகளின் எண்ணிக்கை

இரண்டு

6. விருதிற்கான பரிசு தொகை

தலா ரூபாய் ஒரு இலட்சம்

7. விருது வகை

சமுதாயத்திற்கு பயனுள்ளதும் மரபுவழி தொழில்நுட்பங்களின் அடிப்படையில் கிராமப்புற மக்களின் கண்டுபிடிப்புகள் இருக்க வேண்டும்.

8. பொது நிபந்தனைகள்

1. விண்ணப்பதாரர்கள் முழுமையாக பூர்த்தி செய்து கையொப்பமிடப்பட்ட அசல் விண்ணப்பப் படிவத்தை அறிவியல் நகரத்திற்கு அனுப்ப வேண்டும்.

2. விண்ணப்பதாரரின் கண்டுபிடிப்பிற்கான ஆவணங்கள், சான்றிதழ்கள், புகைப்படங்கள் வரிசை விளக்க வரைபடம், சோதனை அறிக்கைகள் மற்றும் கண்டுபிடிப்பு சார்ந்த இதர ஆவணங்கள் இருப்பின் அறிவியல் நகரத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

3. விண்ணப்பதாரர் அவருடைய கண்டுபிடிப்பு வேறு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலோ அல்லது அதற்காக விருது பெற்றிருந்தாலோ அத்த தகவலையும் விண்ணப்பத்தில் தெரிவிக்க வேண்டும்.

4. விண்ணப்பதாரர் அவர் தம் கண்டுபிடிப்புகள் பற்றி அறிவியல் பத்திரிக்கைகளில் வெளியிடப்பட்ட விபரங்கள், செய்தித்தாள் வெளியீடுகள், காப்புரிமை (ஏதாவது இருப்பின்) மற்றும் கண்டுபிடிப்பிற்கு ஆதரிக்கும் விதமாக இதர தகவல்கள் இருந்தால் தெரிவிக்கலாம். 5. தேவைப்படும் பட்சத்தில் விண்ணப்பதாரர் செயல்படும் விதம் (workingmodels) குறித்து அறிவியல் நகரத்திற்கு அனுப்ப வேண்டும். விண்ணப்பதாரர்கள் சுய தொழில் புரிந்தால், விண்ணப்பத்தில் அதனை தெளிவாக குறிப்பிட வேண்டும். 6. ஏதாவது நிறுவனங்களில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள், தங்கள் விண்ணப்பத்தின் நம்பகத் தன்மையை அறிய அந்த நிறுவத்தின் தலைவர் மூலம் விண்ணப்பம் அனுப்பிட வேண்டும். அதனுடன் நிறுவனத்தின் தலைவரால் வழங்கப்பட்ட தடையின்மைச் சான்றிதழை இணைக்க வேண்டும். 7. குழுவாக செயல்பட்டு புதிய கண்டுபிடிப்பினை கண்டுபிடித்தால் குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரிடமும் ஒப்புதல் பெற்று அதனை விண்ணப்ப அசல் படிவத்துடன் இணைக்க வேண்டும். 8. விருது பெறும் கண்டுபிடிப்பு, ஒரு குழுவினால் கண்டுபிடிக்கப்பட்டிருந்தால் விருது தொகையினை சமமாக பிரித்து வழங்கப்படும். எனினும் விண்ணப்பதாரர்கள் சமபங்கு தொகையை பெற விரும்பவில்லை என்றால், சதவீத அளவில் பெறக்கூடிய விருது தொகையின் அளவை விண்ணப்பப் படிவத்தில் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். 9. தவறான தகவல்கள் அளிக்கப்பட்டிருப்பது தெரியவந்தால் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். 10. கண்டுபிடிப்பினை மதிப்பிடுவதற்கு தேவைப்படும் தகவல்கள் தெரிவிக்கப்படவில்லை என்றால் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். 11. விண்ணப்பதாரர்கள் , அறிவியல் நகர அலுவலர்களையோ, தேர்வு செய்யும் வல்லுநர்கள் குழு உறுப்பினர்களையோ தொடர்பு கொண்டு தங்களது செல்வாக்கை பயன்படுத்த

எவ்வித வழிகளிலும் முயன்றால் அவர்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். 12. அறிவியல் நகரத்தால் நியமிக்கப்பட்ட வல்லுநர்கள் குழு எந்த கண்டுபிடிப்பினையும் விருதிற்கு தகுதியானவை அல்ல என்று கருதினால் அவ்வருடம் விருது வழங்கப்பட மாட்டாது. 13. விருதிற்காக அறிவியல் நகரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் மற்றும் ஆவணங்கள் எக்காரணத்தை கொண்டும் திரும்ப வழங்க இயலாது. 14. விருது வழங்குவதற்கு பின்பற்றப்படும் வழி முறைகளின் கீழ், நெறிமுறை மற்றும் வரையறைகளுக்கும் உட்படாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பத்தை நிராகரிக்க அறிவியல் நகரத்திற்கு அனைத்து உரிமையும் உள்ளது. 15. விருதிற்கு தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு தகவல், அஞ்சல் மூலம் தெரிவிக்கப்படும்.

தாங்கள் மேற்கூறிய விருதுக்கான விண்ணப்பங்களை பெற்று அவற்றினை தங்கள் தொடர்புடைய பகுதிகளில் உள்ள மாவட்ட ஆட்சி தலைவர் அவர்கள் மூலமாக அறிவியல் நகரத்திற்கு விரைந்து அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

துணைத்தலைவர்

இணைப்பு : மாதிரி விண்ணப்பப்படிவம்

விண்ணப்பப் படிவம் கீழ்க்கண்டவாறு இருக்க வேண்டும்.

1. விண்ணப்பதாரரின் பெயர், 2. மற்றும் புகைப்படம், 3. விண்ணப்பதாரரின் பிறந்த தேதி / வயது செப்டம்பர் 30, 2019– ன் படி), 4. விண்ணப்பதாரரின் முகவரி, தொலைபேசி எண் மற்றும் அலைபேசி எண், 5.அறிவியல் கண்டுபிடிப்பிற்கு வழங்கப்பட்ட பெயர், 6. அறிவியல் கண்டுபிடிப்பு நிகழ்த்தப்பட்ட ஆண்டு, 7. அறிவியல் கண்டுபிடிப்பு தங்கள் மரபு வழி, தொழில் நுட்ப அறிவு அடிப்படையில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தால் அவற்றின் விவரம், 8. அறிவியல் கண்டுபிடிப்பினை பற்றி எழுத்துப்பூர்வமான விளக்கம் (ஒரு பக்கத்திற்கு மிகாமல்), 9. அறிவியல் கண்டுபிடிப்பினால் தமிழ்நாட்டில் மக்கள் வாழ்க்கையில், ஏற்பட்ட பயன்கள், 10. அறிவியல் கண்டுபிடிப்பு வேறு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலோ அல்லது அதற்காக விருது வழங்கப்பட்டிருந்தாலோ அதன் விவரம். , 11. அறிவியல் கண்டுபிடிப்பு தனிநபரால் உருவாக்கப்பட்டதா அல்லது குழுவாக உருவாக்கப்பட்டதா என்ற விவரம் 12. குழுவாக இருந்தால் குழு நபர்களின் பெயர்களும் கண்டுபிடிப்பிற்கான அவர்களது பங்களிப்பு பற்றி விவரிக்கவும், 13. குழுவாக கண்டுபிடிப்பு நிகழ்த்தப்பட்டிருந்தால், பரிசு வழங்கும் போது ஒவ்வொரு நபருக்கும் பரிசு தொகை எவ்வளவு சதவீத அளவில் வழங்க பட வேண்டும் என்பது பற்றிய விவரங்களை தெரிவிக்கவும். இதற்கு குழுவின் ஒவ்வொரு நபரிடமிருந்து ஒப்புதல் கடிதம் பெற்று அதனை இணைக்கவும். அவ்வாறு ஒப்புதல் கடிதம் இணைக்க தவறினால் பரிசு தொகை சரி சமமாக பிரித்து வழங்கப்படும். 14. அறிவியல் கண்டுபிடிப்பிற்கு காப்புரிமை பெறப்பட்டுள்ளதா அவ்வாறு பெற்றிருந்தால் அதன் விவரங்களை வழங்கவும். 15. அறிவியல் கண்டுபிடிப்பிலிருந்து அறிவியல் வெளியீடுகள் பிரசுரிக்கப்பட்டிருந்தால் அவற்றின் விவரம். 16. அறிவியல் கண்டுபிடிப்பினை பற்றிய மேற்கூறியவை அல்லாமல் வேறு ஏதேனும் கூடுதல் தகவல்கள் இருந்தால் அதனை தகுந்த சான்றுடன் தெரிவிக்கவும். கையொப்பம்

உறுதிமொழி படிவம்

ஊரக அறிவியல் கண்டுபிடிப்பாளர் விருது 2019–2020 விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட அனைத்து விவரங்களும் சரியாகவும் முழுமையாகவும் உள்ளன என்று நான் இதன் மூலம் உறுதியாளிக்கின்றேன். இவ்விருது தொடர்பாக அறிவியல் நகரம் எடுக்கும் அனைத்து முடிவுகளையும் நான் ஏற்கிறேன்.

தேதி : இடம் :

விண்ணப்பதாரர் கையொப்பம்

சான்றிதழ்

திரு/திருமதி ---------- என்கிற நான் ஊரக அறிவியல் கண்டுபிடிப்பாளர் விருது 2019–20 க்காக அறிவியல் நகரத்தால் கொடுக்கப்பட்டிருக்கும் விதிகளுக்கு உட்பட்டு திரு / திருமதி ------- அவர்களால் நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை, முழுமையாக கண்டுணர்ந்து அனைத்தும்

உண்மையானவை என்று அவர் அளித்த சான்றின் அடிப்படையில், ஆட்சியர் என்ற முறையில் சான்று அளிக்கிறேன்.

தேதி : இடம்:

மாவட்ட ஆட்சியர்

(கையொப்பம் மற்றும் முத்திரை)

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

அறிவியல் நகரம்

உயர்கல்வித்துறை,

பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப

மைய வளாகம், காந்தி மண்டபம் சாலை

சென்னை– 600025

தொலைபேசி : 044–24454054, 24454034

புண்ணிய மூர்த்தியின் கால்நடை மூலிகை வைத்ய அனுபவங்கள்

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக கால்நடை மருத்துவ பல்கலைகழகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். நமது நாட்டில் பாரம்பரிய கால்நடை மூலிகை வைத்யம் சிறப்பாக பயன்பாட்டில் இருந்தது. குறிப்பாக தமிழ்நாட்டில் இம்முறை கடைபிடிக்கப்பட்டு வந்தது. தற்சமயம் பல்வேறு காரணங்களினால் பாரம்பரிய அறிவு அழிந்து வருகிறது. இதற்கு புத்துயிர் கொடுத்து மீண்டும் இயற்கை வழியில் கால்நடை மூலிகை வைத்யம் செய்திட தேனீ குழுமத்தின் (நம் வழி வேளாண்மை குழுமம்) ஸ்தாபகர் பேராசிரியர் அனில்குப்தா 1990 லிருந்து ஓர் இயக்கத்தை ஏற்படுத்தியுள்ளார். இந்த இயக்கத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாட்டில் சேவா விவேகானந்தன் கிராமப்புறங்களில் கடைபிடிக்கப்படும் பாரம்பரிய வைத்ய முறைகளை தொகுத்து வருகிறார். இதில் நானும் தொடர்பு கொண்டு பேராசிரியர் அனில்குப்தாவை இரு முறை மதுரையில் சந்தித்துள்ளேன். அவர் என்னிடம் பாரம்பரிய கால்நடை வைத்யத்தை விஞ்ஞான ரீதியில் சோதனை செய்து வெளி கொணரவேண்டும் என கூறியுள்ளார். பாரம்பரிய கால்நடை வைத்தியத்தை பட்டய படிப்பாக தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைகழகத்தில் கொண்டு வருவதற்கு பெங்களூரை சார்ந்த மரபுசார் மருத்துவ முறைகளின் மறுமலர்ச்சி பேரவை (FRLHT) உறுதுணையாக இருந்தது.

1996 ல் அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளுக்கு சென்றிருந்த போது ஆண்டிபயாடிக்ஸ் மூலம் ஏற்படும் பின்விளைவுகளை உணர முடிந்தது. நான் பல்கலைகழகத்திலிருந்து ஓய்வு பெறும் முன் தமிழக அரசின் திட்ட கமிஷன் துறையிலிருந்து பாரம்பரிய கால்நடை மூலிகை வைத்யத்தை வெளி கொணர சுமார் ரூ. 13 கோடி நிதியுதவி பெற்று கொடுத்துள்ளேன். இதன் மூலம் மாவட்டம் தோறும் கால்நடை மருத்துவர்களுக்கும், விவசாயிகளுக்கும் கால்நடை மூலிகை வைத்ய பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை அப்போது திட்ட கமிஷனின் செயலாளாராக இருந்த திருமதி சாந்தா சீலாநாயர் இதனை அமோதித்து இந்த பெரிய தொகைக்கு ஒப்புதல் கொடுத்தது முக்கியமான நிகழ்வாகும். தற்சமயம் தேசிய பால்வளவாரியம், ஆனந்த் என்ற நிறுவனத்துடன் இணைந்து கால்நடை மூலிகை வைத்யத்தை பரவலாக்கி கொண்டு வருகிறேன். பல்கலைகழகத்திலிருந்து ஓய்வு பெற்ற பின் இது போன்ற நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்ற நல்ல வாய்ப்பு கிடைத்தது குறித்து சந்தோஷம்படுகிறேன்.

2007ல் கர்நாடகா, தும்கூர் சென்றிருந்த போது அங்கு பாரம்பரிய வைத்தியர் சிவண்ணாவை சந்தித்தேன். அவர் தன்கையில் வைத்திருந்த எலுமிச்சை பழம், உப்பு, மிளகை காட்டி உலகில் எந்த நோய்க்கும் இதனை பயன்படுத்தி பலன் பெறலாம் என்று கூறினார். இந்த அறிவை கொண்டு மடி நோய்க்கு களிம்பு தயாரிப்பதை முறைப்படுத்தினேன். என்னுடைய முயற்சியினால் கால்நடை மூலிகை வைத்யம் இன்று 24 மாநிலங்களில் 1500 கூட்டுறவு பால் பண்ணைகளில் பயன்பாட்டில் உள்ளது. இதில் 1350 கால்நடை வைத்யர்கள் இதனை கடைபிடித்து 45000 மாடுகளை குணப்படுத்தியுள்ளனர் என்றால் அது மிகையாகாது. ஒரு முறை கால்நடை வைத்ய கருத்தரங்கில் ஓடைப்பட்டி பொன்னுச்சாமி என்ற வைத்தியர் கூறிய பாடல் நினைவிற்கு வருகிறது.

''மண்ணின் வேந்தன், மலையில் முனிவன், உண்ணும் சோற்றுக்கு ருசியானவன், இதை கண்ணில், காதில், மூக்கில் விட விண்ணில் போன உயிர் திரும்புமே''

இதை மிகவும் எளிமைப்படுத்தி மண்ணின் வேந்தன் வெற்றிலை, மலையின் வேந்தன் மிளகு, கடலின் வேந்தன் உப்பு என்று கூறி இதனை அரைத்து சாறு பிழிந்து கண்ணில், காதில், மூக்கில் நசியம் விட்டு வயிறு உப்பிசம், விஷக்கடி, காய்ச்சல், படுத்தமாடு எழாமல் இருத்தல் போன்றவற்றிற்கு முதலுதவி சிகிச்சையாக கூறி வருகிறேன். நான் கூறி வரும் மடிநோய் களிம்பை (சோற்றுக்கற்றாழை, மஞ்சள், சுண்ணாம்பு சேர்த்து அரைத்தது) நோய் கண்ட மாட்டிற்கு மடியை சுத்தம் செய்து ஒரு நாளைக்கு 8–10 முறை அதாவது ஒவ்வொரு வேளையும் 3 முறை தடவி வர வேண்டும். இதனை 3–5 நாட்கள் அல்லது குணமாகும் வரை செய்து வர வேண்டும். வாய் வழியாக ஒரு வேளைக்கு இரண்டு எலுமிச்சை பழம் (இரண்டாக வகுந்து) உப்பு தொட்டு உள்ளே ஒரு நாளைக்கு 3 வேளை கொடுக்க வேண்டும்.

புண்ணிய மூர்த்தி
இரத்தினசாமி நகர்,தஞ்சாவூர் – 613 006
செல்: 9842455833

நல்லுச்சாமியின் நாட்டுக்கோழி வளர்ப்பு

கரூர் மாவட்டம், புலியூர் கிராமத்தில் திரு நல்லுச்சாமி (வயது 66) பழைய எஸ்.எஸ்.எல்.சி. படித்து விட்டு வேலைக்கு போகாமல் விவசாயம் செய்து வருகிறார். இவர் தனது தோட்டத்தில் கரும்பு, தென்னை, தீவனப்பயிர் சாகுபடி செய்து வருகிறார்.

இவர் கடந்த 7 வருடங்களாக நாட்டுக்கோழி வளர்த்து லாபம் ஈட்டி வருகிறார். இவர் தோட்டத்தை தேடி வந்து நாட்டுக்கோழி (கறி கோழி) வாங்கி செல்லுகின்றனர். இவர் கூற்றுப்படி ஒரு சென்ட் நிலத்தில் கோழி வளர்த்தால் மாதம் ரூ. 1000 வருமானம் எடுக்கலாம். 10 சென்ட் நிலம் இருந்தால் மாதம் ரூ. 10,000 எடுக்கலாம். 100 சென்ட் (1 ஏக்கர்)நிலம் இருந்தால் மாதம் ரூ. 1,00,000 ஈட்டலாம். 10 சென்ட் நிலத்தில் சுமார் 100 குஞ்சுகள் வளர்த்து 2–3 மாதங்களில் விற்பனை செய்யலாம். இவர் தற்சமயம் 250 கோழி குஞ்சுகள் (பொறித்த ஒரு நாள் குஞ்சுகள்) விலைக்கு வாங்குகிறார். இவைகளை பக்குவமாக 2–3 மாதங்கள் வளர்த்து சுமார் 1 கிலோ எடை வந்தவுடன் (75 வது நாளில்) விற்று விடுகிறார். கோழிகளுக்கு ஒரு நாளைக்கு 4 முறை தீவனம் கொடுக்கிறார். காலை 6.30 மணிக்கு கோழித்தீவனம் அரைத்தது (மக்காச்சோளம் – 25 கிலோ, அரிசிகுருணை–15 கிலோ, புழுங்கல்அரிசி தவிடு–15 கிலோ, சோளம் –12 கிலோ, கடலைபுண்ணாக்கு – 15 கிலோ,

கம்பு –15 கிலோ, தாதுப்பு கலவை – 2 கிலோ,
உப்பு –1 கிலோ) கொடுக்கிறார். காலை 8 மணிக்கு வேலிமசால், சூப்பர் நேப்பியர், குப்பைமேனி போன்றவற்றை நறுக்கி கொடுக்கிறார். அவ்வப்போது வாழை இலை, வேப்பிலை, முருங்கையிலை போன்றவற்றை தொங்கப்போடுகிறார். இதனை கோழிகள் விரும்பி எடுக்கும். மதியம் 12 மணிக்கு ''அசோலா'' என்ற பாசியை (தோட்டத்தில் வளர்த்தது) கோழிக்கு 30 கிராம் வீதம் கொடுக்கிறார். மாலை 5 மணிக்கு அரைத்த தீவனம் கொடுக்கிறார். இவர் தீவனம் தயாரிக்கும் சமயம் மீன்தூள் கலந்தால் எறும்பு வந்துவிடுமாதலால் இதை சேர்ப்பதில்லை.

கோழி குஞ்சுகளுக்கு வாங்கி வந்த முதல் 10 நாட்களுக்கு காய்ச்சிய தண்ணீர் கொடுக்கிறார். ஏழாவது நாளில் இராணிகட் நோய்க்கு தடுப்பூசியும் (எப் 1 வகை) 21 வது நாளில் லசோட்டாயும் 58 வது நாளில் இராணிகட் தடுப்பூசியும்
(கே வகை)போடுகிறார். இதனை இவரே செய்கிறார். சுகாதார மேலாண்மைக்கு தனது பண்ணையில் 10 லிட்டர் நீரில் 100 மி.லி. பார்மலின் மருந்தையும் பொட்டாசியம் பெர்மாங்கனேட் மருந்து 50 மி.லி. சிறிது பசுஞ் சாணம் சேர்த்து கரைசலாக தயாரித்து தெளித்து விடுகிறார். இதனை 10 நாட்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும். கோழிகளை விற்றப்பின் பண்ணையை சுத்தம் செய்து உலர வைத்து 10 நாட்கள் கழித்து புதிய பேட்ச் கோழிகள் வாங்கி விடுகிறார். இந்த சமயத்தில் மேற் சொன்ன பார்மலின் கலவையை தெளிக்கிறார். ஒரு வருடத்திற்கு 5 முறை கோழிகள் வாங்கி விற்கப்படுகின்றன. கோழிகளுக்கு வாங்கி வந்த 7 நாட்களுக்கு சோற்றுக்கற்றாழை, சீரகம், மஞ்சள்தூள் கலந்த நீர் கொடுக்க வேண்டும். இதனால் நோய் எதிர்ப்பு சக்தி உண்டாகும். மாதம் ஒரு முறை சோற்றுக்கற்றாழை (250 கிராம்), பனங்கருப்பட்டி (200 கிராம்), சுக்கு(10 கிராம்) நீரில் கொதிக்க வைத்து வடிகட்டிய கசாயம் 100 மி.லி (ஒரு கோழிக்கு)தயார் செய்து கொடுத்து வர வேண்டும். இதனால் கழிச்சல், அம்மை, குடற்புழு நோய் கிருமிகள் வராது. இவர் கோழியை வா.... வா என்று அழைத்தால் உடனே பறந்தோடி வரும். சில கோழிகள் பறந்து வரவில்லை என்றால் அது நோய்வாய்ப்பட்ட கோழி என்று தெரிந்து வைத்யம் செய்யலாம் அல்லது கழித்து விடலாம்.

இவர் தனது தோட்டத்தில் கடந்த 4 வருடங்கலாக அசோலா பாசி சாகுபடி செய்து வருகிறார். அசோலாவிற்கு 3 மாதத்திற்கு ஒரு முறை தண்ணீரையும் மண்ணையும் மாற்றி விட வேண்டும். இவர் 54X54 அடியில் ஒரு பசுமை குடில் அமைத்து அதில் சுமார் 10X4 அடியில் பிளாஸ்டிக் சீட் கொண்டு 1 அடி ஆழத்தில் நீர் நிரப்பி அசோலா வளர்த்து வருகிறார். இதற்கு தாதுப்பு கலவை, சூப்பர் பாஸ்பேட், பச்சை சாணம் போன்றவற்றை மாதத்திற்கு ஒரு முறை இட்டு வருகிறார். இவர் பல நபர்களுக்கு விதை பாசியாக விநியோகம் செய்து வருகிறார். ஒரு கிலோ பாசி ரூ. 100 க்கு விற்பனை செய்கிறார். பசுமைக் குடில் அமைக்க ரூ. 1.5 லட்சம் செலவானது. மானிய தொகை ரூ. 75,000 வேளாண்மை துறையிலிருந்து (கரும்பு கரணைகள் வளர்ப்பதற்கு) பெற்றுள்ளார்.

இவர் பொறித்த குஞ்சுகளை ரூ. 55 க்கு வாங்கி வருகிறார். இதனை 1.5 கிலோ எடை வரும் சமயம் கிலோவுக்கு ரூ. 500க்கு விற்கிறார். வருடத்திற்கு 5 முறை கோழி வெள்ளாமை (5 பேட்ச்) எடுக்கிறார். 10 சென்ட் நிலத்தில் 100 கோழி வளர்த்தால் மாதம்
ரூ. 15,000 எளிதாக வருமானம் எடுக்கலாம் என்று துள்ளியாமாகக் கூறுகிறார்.

பி. நல்லுச்சாமி
த/பெ. பிச்சைமுத்து
புலியூர் சிமெண்ட் பேக்ட்ரி அருகில்
வீரராக்கியம் அஞ்சல், கிருஷ்ணராயபுரம் தாலுகா
கரூர் மாவட்டம் – 639114, செல் : 9488613451

இயற்க்கை மிளகாய் சாகுபடி

நான் கடந்த 5 ஆண்டுகளுக்கு மேல் மிளகாய் பயிரிட்டு வருகிறேன். இப்பகுதியில் காணப்படும் பொத்த மிளகாய் பாரம்பரிய இரகம் (காரம் அதிகம்)

பயிர் செய்கிறேன். பயிர் நடும் முன் தக்கைப்பூண்டு பயிர் செய்து உழுதுவிடுகிறேன். நன்கு 4 முறை உழவு செய்வதால் களைச்செடிகள் அழிகின்றன. பின்னர் 4 லோடு குப்பை இடுகிறோம். மிளகாய் நட்டபின் ஜீவாமிருதம் தெளித்து வருகிறேன். மிளகாயில் காய்ப்புழு தோன்றினால் பூடு இஞ்சி கரைசல் தயார் செய்து அடிக்கிறேன். பூண்டு 1/2 கிலோ, இஞ்சி 1/2 கிலோ அரைத்து 10 லிட்டர் மாட்டு கோமியத்தில் ஊற வைத்து வடிகட்டிய கரைசல் 1 லிட்டர் எடுத்து 10 லிட்டர் நீரில் கலந்து தெளிப்பானில் வைத்து தெளிக்கிறேன். இதில் நல்ல பலன் கிடைக்கிறது. மிளகாய், சிவப்புகீரை, கத்திரி போன்ற காய்கறி பயிர்களை கேரளாவிற்கு வேன்மூலம் அனுப்பி விற்கிறேன். என்னுடைய விவசாய பொருட்கள் இயற்கையாக விளைந்திருப்பதால் நல்ல விலை கிடைக்கிறது.

ஆர்மி. மாரியப்பன்
அன்னை இல்லம், 215 – ஏ, வடக்கு தெரு
நகரம்– 627755, கடையநல்லூர் தாலுகா
திருநெல்வேலி மாவட்டம், செல் – 9600497706

பசுராகவனின் பசு பராமரிப்பு உத்திகள்

பசு பாதுகாப்பிற்காக தன்னை அர்பனித்து வரும் திரு. பசுராகவன் பசு பராமரிப்பில் கடைபிடிக்க வேண்டிய உத்திகளைக் கூறி வருகிறார்.

1. மாடுகள் நித்தமும் 6 மணி நேரம் நடக்க விட வேண்டும். 2. பசுவை கன்றுடன் சேர்த்து மேய விட வேண்டும். பசுவின் பாலை காலை ஒரு வேளை மட்டும் கறந்து பின் கன்றுக்கு விட்டு விட வேண்டும். கன்று நல்ல வளர்ச்சி பெற்று கால்நடை இனம் பெருகும்.

3. மாட்டிற்கு வேப்பந்தழை ஒரு வாரத்திற்கு ஒரு முறை தர வேண்டும். மாடு விரும்பி எடுப்பதற்கு முதல் நாள் இரவு தீனி எதுவும் தரக்கூடாது. வேப்பந்தழை எடுக்காத மாடுகளுக்கு அரைத்து நீரில் கலந்து தரலாம். 4. மாட்டை வாரம் ஒரு தடவை குளிப்பாட்ட வேண்டும். மாட்டுக்கு ''மேய்ச்சல் பாதி தேய்ச்சல் பாதி'' இருக்க வேண்டும் என்பதை பழமொழியாக சொல்வர். 5. மரத்தழை மாடுகளுக்கு போடுவதால் இதில் நல்ல ஊட்டச்சத்துக்கள் மாடுகள் எடுத்து கொள்ளும். 6. மாட்டு தீவனத்தில் 5 சதம் அடர் தீவனம் (தவிடு, புண்ணாக்கு) தரலாம். 7. மாடுகள் தானாக மேயும் சமயம் நுனிப்புல்லை மட்டும் விரும்பு மேயும். புல், பயறு தழை, மர இலை என அனைத்துவகை தாவரங்களை தீவனமாகக் கொடுப்பது சிறந்தது.

எஸ். பசுராகவன்
இயற்கை நலவாழ்வு மையம்
2/55–பீ, மாதவபுரிஷ்வரர் கோவில் தெரு
புனவாசல், கமலாபுரம்,
திருவாரூர் மாவட்டம்– 610102
செல் : 9362121956, 9382746223

வெள்ளாடு வளர்ப்பில் சமூதாய கால்நடை தன்னார்வலர்களின் பணியும் வருமானமும்

நாங்கள் இசக்கிதங்கம், செண்டு, கலைவாணி ஆகிய மூவரும் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் தாலுகா சண்முகபுரம் கிராமத்தில் வசித்து வருகிறோம். நாங்கள் மூவரும் வீரபாண்டியன் பட்டணம் (Rural) சண்முகபுரத்தில் சுய உதவி குழு உறுப்பினர்களாகவும் மற்றும் சமுதாய கால்நடை தன்னார்வலர்களாகவும் (Community Livestock Volunteers) உள்ளோம். இதன் மூலம் சுனாமிக்கு பின் நிலைத்த வாழ்வாதார திட்டம் மற்றும் சேவா தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் ஆடு வளர்ப்பு

பயிற்சியில் கலந்து கொண்டோம். ஆறு நாட்கள் எங்களுக்கு பயிற்சி அளித்தார்கள். இந்த பயிற்சியின் மூலம் ஆடு வளர்ப்பு பற்றி முறையாக தெரிந்து கொண்டோம். ஆட்டின் இனங்கள், ஆட்டிற்கு எண்ணென் நோய்கள் அதற்கு உண்டான மருத்துவம் பற்றி தெரிந்து கொண்டோம். ஆட்டிற்கான கொட்டகை ஆடுகளை எப்படி விற்பனை செய்வது என்று எங்களுக்கு தெரியாது இப்பயிற்சியின் மூலம் தெரிந்து கொண்டோம். எங்கள் ஊரில் ஆட்டுச்சந்தை மேளா விற்பனை செய்வதற்கு நாங்கள் தயார் செய்து கொண்டிருக்கின்றோம்.

ஆறு நாட்கள் பயிற்சியில் மசால் உருண்டை எப்படி செய்வது போன்ற பல மூலிகை தயாரிப்புகளை சொல்லி தந்தார்கள். கிராமத்தில் எளிதில் கிடைக்க கூடிய மூலிகை செடிகள் மற்றும் அதற்கு உண்டான மசாலா பொருட்கள் (பேருகாலசாமான்கள்) சேர்த்து அரைத்து உருண்டை செய்து ஆடு, மாடு, கோழிகளுக்கும் கொடுத்தால் எவ்வளவு நன்மை என்று சொன்னார்கள். அது போல நாங்களும் தயார் செய்து கால்நடை வளர்ப்போருக்கு கொடுத்ததில் நல்ல பலன் கிடைத்தை உணர்ந்து கொண்டோம். இதனை நவம்பர் 2019 லிருந்து விற்பனை செய்து வருகிறோம். இத்துடன் கூட மத்தான் தைலம், குடற்புழு நீக்க மருந்து இவைகளை தயாரிக்க நாங்கள் மூவரும் சேர்ந்து ஒவ்வொரு ஞாயிற்று கிழமையில் இலைகளை பறித்து கொண்டு வருவோம். மசாலா பொருட்கள் ஒரு மாதத்திற்கு தேவையான பொருட்களை அரவை மிக்ஸியில் தூளாக அரைத்து வைப்போம். நாங்கள் ஞாயிற்று கிழமை செடிகளை பறித்து மூலிகை தயாரிப்புகளை செய்து முடிப்போம். திங்கள், செவ்வாய், புதன் நாட்களில் தயாரித்த உருண்டைகளை 3 நாட்களுக்குள் கால்நடை வளர்ப்போர்களுக்கு கொடுத்து வருகிறோம். மாதம் சுமார் 2400 உருண்டை தயார் செய்கின்றோம். ஒவ்வொரு உருண்டையின் விலை ரூ. 5 என்று கொடுக்கிறோம். இதனால் ரூ. 12,000 வருமானம் கிடைக்கும். இவ்வுருண்டைகளை சுமார் 300 குடும்பங்களுக்கு கொடுத்து வருகிறோம். உள்ளூரில் நாங்கள் தனித்தனியாக சென்று கொடுக்கிறோம். வெளியூருக்கு செல்லும் சமயம் மூன்று பேரும் சேர்ந்து பேருந்து அல்லது இசக்கி அம்மாளின் ஸ்கூட்டரில் (கணவரின் ஸ்கூட்டர் பயன்படுத்தப்படாத நாட்களில்) 8 கிராமங்களுக்கு சென்று விற்பனை செய்கிறோம். நாங்கள் சண்முகபுரம், அடைக்கலாபுரம், சமத்துவநகர், முத்துநகர், காட்டுமகதன்பள்ளி, சிவந்திநகர், பிளோமின் நகர், சுனாமி நகர் கிராமங்களுக்கு கொடுத்து வருகிறோம். ஒரு மாதத்திற்கு நான்கு முறை மாதத்திற்கு ஓர் ஆள் 600 முதல் 700 மசாலா உருண்டை தயார் செய்து விற்பனை செய்வதால் ஒரு நபருக்கு செலவு போக மாதம் தோறும் ரூ.2900 கிடைக்கிறது. மத்தான் தைலம் 1 லிட்டர் தயாரிக்க ரூ. 150 செலவாகும். இதனை விற்பனை செய்வதால் ரூ. 500 கிடைக்கிறது. இதனால் லாபம் ரூ. 150 கிடைக்கிறது. 10 மி.லி ரூ. 10க்கும் , குடற்புழு மருந்து 20 மி.லி. ரூ. 20க்கும் என்று விற்பனை செய்கின்றோம். இதனை பயன்படுத்திய கால்நடை வளர்ப்போர் ஆடு, மாடு, கோழிகள் நன்கு ஆரோக்கியமாக இருப்பதை பார்த்து தொடர்ந்து கேட்கின்றனர். கழிச்சல், மடி நோய், குட்டி ஈனும் சமயம் பிரச்சனை போன்ற நோய்களுக்கு நல்ல நிவாரணம் கிடைக்கிறது. உதாரணமாக மயங்கி தூங்கும் நிலையிலிருந்த கோழி குஞ்சுகள் குணமாகியுள்ளன. இந்த செய்தி ஊரெங்கும் பரவியதால் மூலிகை மருந்துக்கு நல்ல வரவேற்ப்பு உள்ளது. இதன் மூலம் எங்களுக்கு நல்ல வருமானமும் கிடைக்கிறது. எங்களை வாழ வைத்த சுனாமிக்கு பின் நிலைத்த வாழ்வாதார திட்டம் மற்றும் சேவா நிறுவனத்திற்கு எங்கள் நன்றியை தெரிவித்து கொள்கிறோம். நாங்கள் ஆடு வைத்திருப்போரை கிராமங்களுக்கு சென்று மாதம்தோறும் 4 தடவை பார்வையிடுகிறோம். இசக்கிதங்கம் 225 ஆடுகளையும் (சொந்த ஆடு 5), செண்டு 275 ஆடுகளையும் (சொந்த ஆடு 2), கலைவாணி 250 ஆடுகளையும் (சொந்த ஆடு 4) கண்காணித்து வருகிறோம்.

1. இசக்கிதங்கம், 2. செண்டு, 3. கலைவாணி
சமூதாய கால்நடை தன்னார்வலர்கள்
சண்முகபுரம்
வீரபாண்டி பட்டிணம் ரூரல் பஞ்சாயத்து
திருச்செந்தூர் தாலுகா
தூத்துக்குடி மாவட்டம்
செல் : 9025544505

வாட்ஸ் அப் தகவல்

நேற்று நண்பர் ஒருவரின் உறவினருக்கு புற்று நோய் உள்ளது மருந்து வாங்க போக வேண்டும் என்றார். சரி என்று இருவரும் கேரளாவுக்கு கிளம்பினோம். கோவையில் இருந்து தடாகம் வழியில் சென்று ஆனைக்கட்டி சென்று அங்கிருந்து முக்காலி செல்ல வேண்டும். முக்காலியில் இருந்து நம் சிறியரக கார்கள் செல்ல முடியாது. ஜீப் வகைகள் வண்டியில் செல்வதே உத்தமம். மிக மோசமான வனதுறை சாலையில் போனால் இருக்கின்றது வள்ளியம்மாள் குருகுலம்.

பாதுகாக்கப்பட்ட வனபகுதியில் பிரம்மாண்ட கட்டிடங்களுடன் உள்ளது இந்த ஒற்றை மூலிகை வைத்தியசாலை. இது எப்படி சாத்தியம் அதுவும் கேரளத்தில் என்று சேட்டன்மார்களிடம் விசாரித்தால் பிரிட்டிஸ் அரசு வள்ளியம்மாள் என்கின்ற ஆதிகுடி இருளர் பெண்ணுக்கு 112 ஏக்கரை பட்டயம் போட்டு தந்துதுள்ளார்கள் என தெரிய வந்தது. அரிய வகை மூலிகை வளர்க்க அன்று வந்த பிரிட்டிஸ் கவர்னர் புற்று நோயால் பாதிக்கப்பட்டு சாகும் நிலையில் இருந்தவரை இருளர் பெண் வைத்திச்சிகள் சில கிழங்கு, மரபட்டை, வேர்களை பொடி செய்து கொடுக்க அவர் மீண்டும் நீண்ட காலம் உயிர் வாழ்ந்திருக்கின்றார். அவர் பட்டயம் செய்து கொடுத்த உரிமையில் இவர்கள் வாழ்ந்து பயன்படுத்தி வருகின்றனர். மூன்று பரம்பரை ஆட்கள் இடங்கள் இங்கு உள்ளது. அவ்வகையில் வள்ளியம்மாள், பொன்னியம்மாள், லட்சுமியம்மாள் என மூவர் உள்ளனர். முக்கியமானவர் வள்ளியம்மாள் ரவீந்திரன் வைத்தியர். பெயரை கொடுத்து விட்டு வைத்தியரை பார்க்க காத்திருந்தால் நிறைய பேர் அமர்ந்திருந்தார்கள். அவர்களிடம் விசாரித்தால் மிகப்பெரிய ஆச்சர்யம்.

கும்பகோணத்தை சேர்ந்த ஒருவர் தஞ்சை மீனாட்சி மிசின் ஆஸ்பத்திரியில் கைவிடப்பட்டவர் ''மூன்று மாதம்தான் உங்கள் ஆயுள்'' என்று சொல்லப்பட்டவராம். எட்டு லட்சம் வரை செலவு செய்தவராம். சாகத்தானே போறோம். கடைசி முயற்சியாக இதை பார்ப்போம் என்று வந்தவர் ''பதினாறு மாதங்களாக வாழ்ந்து வருகின்றேன்'' என்றார். இங்கு பெரும்பாலும் அலோபதி கைவிடப்பட்ட நிலையில் வருகின்றார்கள். பொள்ளாச்சியை சேர்ந்த முரளி என்பவர் சொல்கின்றார். ராமகிருஷ்ணாவில் பதினைந்து லட்சம் செலவு செஞ்சேனுங்க வீட்டை, காட்டை வித்து பார்த்தணுங்க. செலவளித்தும் குணமாகவில்லை. பின்னர் இங்க வந்தேன். இதை ஒரு மாசம் பாப்போம். சரியாகுலையா இருக்கற சொத்தை பொண்டாட்டி பேர்ல எழுதி வச்சுட்டு நாம செத்தரலா முன்னுதான் வந்தேன். இன்னிக்கு மூணுவருசம் ஆச்சுங்க. என்னோட நோய் குணமாயிருச்சு, என்னிடம் அவிக்காத பச்சை மஞ்சளும் உள்ளது. இதனை கேட்போருக்கு கொடுத்து வருகிறேன். ஆனாலும் மருந்தை நிறுத்தலை இன்னும் பத்து வருசம் வாழ்ந்தா போதுங்க எம் பையனை கரையேத்திருவேன் என்று தன் மகனை கட்டியணைத்து கண்ணீர் விடுகின்றார். இப்படி பல பேரின் கதை கேட்க ஆச்சரியமாக உள்ளது. வைத்தியரிடம் கேட்ட போது இந்த புற்றுநோய் முதல் ஸ்டேஜ்ல் இருந்தால் 100 சதவீதம் குணப்படுத்தி விடலாம். ஆனால் நம்பிக்கையிருப்பதில்லை. பல இடங்களில் சுற்றிவிட்டுதான் இங்கு வருகின்றார்கள். நான்காவது ஸ்டேஜ்ஜில் 80 சதவீதம் பேரை பிழைக்க வைத்திருக்கின்றேன். அதற்கு மேல் இறைவன் கருணை என்றார். இது சாத்தியமா? உண்மையா? என்று அவநம்பிக்கையோடுதான் சென்றோன். அங்கு இருந்த மருந்து வாங்க வந்த 100 பேர்களின் கதைகளை கேட்ட போது நம்பிக்கையுள்ளது.

Valliyammal Gurukulam
Tribal Traditional Ottamooli
Cancer Treatment Center
Chindakki, Mukkali, Attapady
Palakkad - 678581 , Ph: 09946097562

நன்றி– வாட்சப் செய்தி

உதயகுமாரியின் கால்நடை ஊக்குநர் பணி

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி தாலுகா, ஜாம்புவானோடை தண்டாங்கொல்லையில் வசிப்பவர் திருமதி எம்.உதயகுமாரி, இவருக்கு வயது 32 இவருக்கு 3 பெண் பிள்ளைகள். இவரது கணவர் இறந்துவிட்டார். இவர் கூலி வேலைக்கு சென்று தான் தன்னுடைய குடும்பத்திற்கு வருமானம் ஈட்டி வருகிறார். மேலும் ஊராட்சியில் தூய்மை காவலர் வேலையின் மூலம் மாதம் ரூ. 2500 வருமானம் பெற்று

வருகிறார். சுனாமிக்கு பின் நிலைத்த வாழ்வாதார திட்டத்தின் கீழ் சேவா நிறுவனத்தின் மூலம் 10 நாள் வெள்ளாடு வளர்ப்பு மற்றும் மூலிகை வைத்திய பயிற்சியான சமுதாய கால்நடை மருத்துவ தன்னார்வலர் பயிற்சி பெற்றுள்ளார். இவர் மேற்கண்ட பயிற்சி எடுத்துக் கொண்ட பிறகு கால்நடைகளுக்கு மூலிகை மசால் உருண்டை, குடற்புழு நீக்க மருந்து, மத்தான் தைலம் போன்ற மூலிகை மருந்துகளை இவருடன் பயிற்சி பெற்ற விஜயராணியுடன் சேர்ந்து விற்பனை செய்து மாதம் ரூ. 3000 வருமானம் ஈட்டி வருகின்றார். மேலும் கால்நடைகளுக்கு வரும் கழிச்சல், உப்பிசம் , காய்ச்சல், மூச்சுதினறல், கோமாரி

போன்ற பல நோய்களுக்கு மூலிகை வைத்யம் செய்து வருகிறார். இவர் இதுவரை 40க்கு மேற்பட்ட கால்நடைகளுக்கு கண்ணில் அடிப்பட்ட கோளாறு, முழி பிதுங்கிய நிலையில் இருந்தது இதற்கு கோவை இலைசாறு, உப்பு சேர்த்து கண்ணில் இட்டு குணப்படுத்தியுள்ளார்.

விஷ்க்கடிக்கு

மாட்டிற்கு விஷம் திண்டியதற்கு கரித்தூள் வெள்ளாட்டு பால் சேர்த்து கொடுத்து குணமாக்கியுள்ளார்.

பயிற்சியாளராக

இவர் மேலும் கால்நடை மூலிகை வைத்ய பயிற்சியாளராக பாண்டிச்சேரி, பெரம்பலூர் போன்ற ஊர்களுக்கு சென்று கால்நடை மூலிகை வைத்திய பயிற்சி கொடுத்து வருகிறார்.

எம். உதயகுமாரி,
க/பெ. முருகானந்த
தண்டாங்கொல்லை
ஜாம்புவானோடை
திருத்துறைப்பூண்டி தாலுகா
திருவாரூர் மாவட்டம்
செல் : 9751201736

அரிவாளால் வெட்டுபட்ட ஆட்டின் காலுக்கு வைத்தியம்

ஓர் ஆட்டின் கால் அரிவாளால் வெட்டுபட்டு சற்றே ஒட்டிக் கொண்டிருந்த நிலையில் இவரிடம் வைத்தியம் செய்ய கொண்டு வந்தனர். இவர் அதற்கு ஊமத்தை இலை மற்றும் மஞ்சள் இரண்டையும் அரைத்து வெட்டு பட்ட புண்ணில் வைத்து காலை நன்கு பொறுத்தி துணியால் சுற்றி கட்டி விட்டு அதன் மீது மத்தான் தைலம் தடவி வந்துள்ளார். இதன் மூலம் ஆடு கால் நன்கு குணமாகியிருக்கிறது.

ஆர். கனகவள்ளி CLV
க/பெ. ரவி
எம்.கே. நகர், கீழகாடு பஞ்சாயத்து
திருவாரூர் மாவட்டம், செல் : 8883030556

கரோனா வைரஸ் நோயும் மாமிச உணவும்

சீனாவில் பரவிவரும் ''கரோனா'' வைரஸ் பதப்படுத்தப்பட்ட மாமிசத்தை உண்டதாலேயே ஏற்பட்டதாகவும் பல்வேறு செய்திகள் தெரிவிக்கின்றன. என்றாலும், மற்ற காரணங்களைவிட தற்போது பல நாடுகளுக்கும் அந்நோய் பரவி வருவதற்கான முதன்மையான காரணம் மாமிச உணவே என்று உறுதி செய்யப்பட்டுள்ளது. திருமூலர் அன்றே, உண்ணத் தகுதியற்ற தீமைதரும் புலால் உணவை உண்ணுகின்ற கீழ்மக்களை உலக நாடுகளே காணும் வண்ணம், எமதூதர்களால் கிருமிகள் தாக்கப்பட்டு துன்பம் தரும் நரகமாகிய மருத்துவமனையில் மல்லாக்கப்படுக்க வைத்து இறக்கச் செய்வார் என்று கூறியுள்ளது கருத்தில் கொள்ளத்தக்கது. இத்தகைய நோய்க் கிருமியை ''செல்'' என்ற சொல்லால் குறிக்கிறார் திருமூலர்.

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்
செல்லாகப் பற்றியத் தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்து வைப்பாரே (மு.த.10.1)

பொல்லாங்கு கொலையால் வருவதாயும்; கொலை செய்யத் துண்டுவதாயும் இருத்தல். இது பற்றி அதனை உண்பாரை புலையர் என்றார் திருமூலர், புலையர் – கீழ்மக்கள்.

உண்மை உள்ளது உயிர்நிலை ஊன் உண்ண அண்ணாத்தல் செய்யாது அளறு (255)

எனத் திருவள்ளுவரும், புலால் உண்பவர் நிரயம் (நரகம்) புகுந்து மீளார் என்றார். இதற்குப் பரிமேலழகர், உயிர் நிலை ஊன் உண்ணாமை உள்ளது. ஒரு சார் உயிர் உடம்பின் கண்ணே நிற்றல் ஊன் உண்ணாமை என்கின்ற அறத்தின் கண்ணது உண்ண அளரு அண்ணாத்தல் செய்யாது ஆகலான், அந்நிலை குலைய ஒருவன் அதனை உண்ணுமாயின் அவனை விழுங்கிய நிரயம் பின் உமிழ்தற்கு அங்காவாது என்கிறார்.

மு. வரதராசனாரோ, ''உயிர்கள் உடம்பு பெற்று வாழும் நிலைமை, ஊன் உண்ணாதிருத்தலை அடிப்படையாகக் கொண்டது. ஊன் உண்டால் நரகம் அவனை வெளிவிடாது'' என்கிறார்.

மனிதனுடைய உயிர் வாழ்க்கைக்கு வேண்டிய எல்லா சத்துப் பொருள்களும் புலால் உண்ணைாமலேயே கிடைக்கின்றன. உயிருக்கு உறுதியான நன்னிலை, ஊன் உண்ணைமையால் உளதாவது, உயிர்கள் உடம்போடு வாழ்தல் ஊன் உண்ணாமை என்னும் அறத்தினைச் சார்ந்துள்ளது என்று இப்பகுதிக்கு இன்றைய உரையாசிரியர்கள் பலர் உரை வகுத்துள்ளனர். அப்படி ஊனை உண்டால், உண்டாரை எல்லா உலகத்தினும் இழிந்த நரகம் விழுங்கிக் கொண்டு வெளியே விட வாயைத் திறக்காது என்கிறார் திருவள்ளுவர்.

மனித உயிரின் நல்லியல்புகளில் ஊன் உண்ணாமையும் ஒன்று. அதனால் தான் அருட்பிரகாச வள்ளலார் ஜீவகாருண்யத்தை வலியுறுத்தினார். அதைக் கடைப்பிடிக்க தொடங்கினாலே போதும்.... இத்தகைய கொடிய நோய்கள் (கரோனா) நம்மை என்றுமே அணுகாது. –

புலவர் பழனி அரங்கசாமி

நன்றி : தினமணி, 15.03.2020

இயற்கை கால்நடைப் பண்ணை கூட்டம்

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியில் இயற்கை கால்நடைப் பண்ணை கூட்டம் 29.01.2020ல் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கால்நடை வல்லுநர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர். இயற்கை முறையைப் பயன்படுத்தி வணிகப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்க இந்தியா ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொண்டாலும், இயற்கை முறைப் பண்ணையை நடைமுறை படுத்துவதில் சிக்கல்களும் உள்ளன.

இயற்கை கால்நடை பண்ணை கருத்தரங்கம்

கால்நடை பொருட்களை ஏற்றுமதி செய்வதில் உள்ள தடைகள்

சுகாதார ஒழுங்குமுறை

இறக்குமதி செய்யும் நாடுகளால் விதிக்கப்படும் கடுமையான சுகாதார ஒழுங்குமுறை விதிகள் காரணமாக ஒரு சில வளரும் நாடுகளால் மட்டுமே கால்நடை தயாரிப்புகளை ஏற்றுமதி செய்ய முடிகிறது. இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்படும் கால்நடைப் பொருட்களின் ஏற்றுமதியில் சுகாதார விதிமுறைகள் மிகவும் கண்டிப்பாக பின்பற்றப்படுகின்றன. தூய்மையான பால் உற்பத்தி, சிறந்த உற்பத்தி முறைகள், தர ஆய்வு, முக்கியமான கட்டுப்பாட்டு புள்ளிகள் மற்றும் சர்வதேச தர நிர்ணய சான்றிதழ் போன்றவற்றை இந்திய அரசாங்கத்தால் தரம் நிர்ணயத்திற்காகப் பின்பற்றப்படுகிறது.

சர்வதேச அளவிலான ஏற்றுமதியை மேம்படுத்த இந்த முயற்சிகள் மேலும் வலுவாக பின்பற்றப்பட வேண்டும். இந்தியாவில் இயற்கை முறை கால்நடை பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு வாய்ப்புகள் உள்ளன. அர்ஜென்டினா மற்றும் பிரேசில் போன்ற வளரும் நாடுகள் அவற்றின் இயற்கை முறை கால்நடை உற்பத்தி பொருட்களை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்கிறது. தரநிர்ணய பின்னாற்றுவது கடினமாக இருந்தாலும் ஏற்றுமதிக்கான சாத்தியம் உள்ளது. முக்கியமாக உற்பத்தி, பதப்படுத்துதல் மற்றும் பேக்கேஜ்ங் போன்றவற்றில் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் செய்தால் ஏற்றுமதி செய்வது எளிது.

பொருட்களின் தரத்தை கண்டறியும் தன்மை

இறக்குமதி செய்யும் நாடுகள் பண்ணையிலிருந்து நுகர்வோர் வரை கால்நடை பொருட்களின் தரத்தை கண்டுபிடிக்கக்கூடியதன்மையை வலியுறுத்துகின்றன. மேலும் சமீப காலங்களில் இது குறித்து அதிக கவனம் செலுத்தப்படுகிறது. மேற்கத்திய நாடுகளில் பண்ணைகள் பெரிய அளவில் இருப்பதாலும் உற்பத்தி அளவு அதிகமாக இருப்பதாலும் தரத்தை நிர்ணயம் செய்வதும் கண்டுபிடிப்பதும் எளிது. ஆனால் இந்தியாவில் பால் மற்றும் இறைச்சி ஏராளமான சிறு விவசாயிகளால் உற்பத்தி பெறப்படுவதால் பொருட்களின் தரத்தை கண்டுபிடிப்பது கடினமானது. இந்திய விவசாய நிலைமைகளுக்கு ஏற்றவாறும் மற்றும் இறக்குமதி செய்யும் நாடுகளும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் குறைந்த செலவில் தரநிர்ணய கருவிகள் உருவாக்கப்பட வேண்டும்.

நோய்கள்

தொற்று நோய்களின் பரவல் கால்நடை பொருட்களின் வர்த்தகத்தை மோசமாக பாதிக்கிறது. இயற்கை முறை கால்நடை உற்பத்தியில் கட்டுப்படுத்தப்பட்ட சுகாதார சூழல் தேவைப்படுகிறது. எனவே, இந்தியாவில் கோமாரி நோயை கட்டுப்படுத்துவதில் முன்னுரிமை அளிக்க வேண்டும். இயற்கை முறை கால்நடை உற்பத்திக்கு நோயில்லா மண்டலத்தை உருவாக்க வேண்டும்.

சிறு பண்ணைகள்

இந்தியாவில், கால்நடை வளர்ப்பு நிலமற்ற மற்றும் சிறு விவசாயிகளின் முக்கியத் தொழிலாகும். இருப்பினும், இயற்கை முறை கால்நடை உற்பத்தி முறையை இவர்கள் பின்பற்றுவது கடினம். ஏனெனில் சிறு பண்ணைகளில் ஏற்றுமதி தரத்திற்கான பொருட்களை உற்பத்தி செய்ய தேவையான வசதிகள் இல்லை. இந்தியாவில் பால் உற்பத்தி பெரும்பாலும் சிறு விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படுவதால் தண்ணீர் சேர்தல் மற்றும் மாசுபடுதல் போன்ற பொதுவான பிரச்சினைகள் உள்ளன. எனவே , சிறு பண்ணை உற்பத்தி முறையை நிலைத்த நீடித்த தொழிலாக மாற்றுவதற்கு பாலை மதிப்பு கூட்டல், சந்தைப்படுத்தல் போன்ற தொழில்நுட்பம் மற்றும் கொள்கைகள் மூலம் மேம்படுத்த வேண்டும். சிறு பண்ணை உற்பத்தியாளர்களின் செயல்திறனை மேம்படுத்த கடன், காப்பீடு மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட சேவைகள் எளிதில் கிடைக்க வேண்டும். இதற்கு ஒப்பந்த வேளாண்மை ஒரு சிறந்த தீர்வாக இருக்கும். ஏனெனில் ஒப்பந்த வேளாண்மை பரஸ்பர நன்மை பயக்கும் முறையாகும்.

விழிப்புணர்வு இல்லாமை

பயிற்சியாளர்கள் மற்றும் விவசாயிகளிடம் இயற்கை முறை கால்நடை உற்பத்தி முறைகள், விலங்கு நல பிரச்சினைகள் மற்றும் இறக்குமதி செய்யும் நாடுகளின் தேவைகள் பற்றிய விழிப்புணர்வு போதுமானதாக இல்லை. இயற்கை முறை கால்நடை உற்பத்தி முறைகள், சான்றிதழ் பெறுவது, கொள்கைகள், தரநிர்ணயம் பற்றி இவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இயற்கை முறை கால்நடை உற்பத்தி தொடர்பான பெரும்பாலான தகவல்கள் ஆங்கிலத்தில் உள்ளதால் இதை சிறு விவசாயிகள் தெரிந்து கொள்வது கடினமாக உள்ளது.

பயிற்சிகள் மற்றும் சான்றிதழ் பெறும் வசதிகள் இல்லாதது

சிறு விவசாயிகளுக்கு பயிற்சிகள் மற்றும் சான்றிதழ் பெறும் வசதிகள் இன்னும் அதிகம் கிடைக்க வில்லை. சிறு விவசாயிகள் இந்தியாவில் உள்ள துணை நிறுவனங்கள் மூலம் வெளிநாட்டு சான்றிதழ் நிறுவனங்களால் செய்யப்படும் தரநிர்ணய கட்டாய ஆய்வுக்கு பணம் செலுத்துவது இயலாததாக உள்ளது. குறைந்த உள்நாட்டு சந்தை வாய்ப்பு மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகள் விவசாயிகள் இயற்கை முறை உற்பத்திக்கு மாறுவதற்குத் தடையாக உள்ளது.

இயற்கை முறை உற்பத்தி முறைப் பின்பற்ற பயிற்சியாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அவசியம். இதற்காக வேளாண் அறிவியல் நிலையங்கள் மூலம் பயிற்சிகள் அளிக்கலாம். இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட வேளாண் பொருட்களின் விற்பனை மற்றும் ஏற்றுமதிக்கு (மஞ்சள்) ஒடிசா மற்றும் பிற மாநிலங்களில் உள்ள வேளாண் அறிவியல் நிலையங்கள் இதற்கான பயிற்சிகளைத் தொடங்கியுள்ளன.

தேசிய இயற்கை முறை உற்பத்தி திட்டத்தின் கீழ் இயற்கை முறை கால்நடை உற்பத்திக்கான நெறிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள்

இயற்கை முறை மேலாண்மைத் திட்டம்

இயற்கை முறை கால்நடை உற்பத்தியைத் தொடங்குவதற்கு முன், விவசாயிகள் விரிவான மேலாண்மை திட்டத்தை உருவாக்கி அதை சான்றளிக்கும் நிறுவனத்திற்கு ஒப்புதலுக்காக அனுப்ப வேண்டும்.

இனங்களை தேர்வு செய்தல்

வெளிநாட்டினங்களை விட அந்தந்த பருவ நிலை மற்றும் காலநிலைக்கு ஏற்ற உள்ளூர் இனங்களை தேர்வு செய்து வளர்க்க வேண்டும்.

கால்நடைகள் வாங்கும் இடம்

ஆரம்பத்தில் வாங்கப்படும் கால்நடைகள் இயற்கை முறை சான்றளிக்கப்பட்ட பண்ணைகளிலிருந்த வாங்க வேண்டும். அவ்வாறு வாங்கவில்லை எனில் ஒவ்வொரு கால்நடைகள்/ கோழிகளுக்கும் இயற்கை முறை மாற்ற காலத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும்.

கொட்டகை வசதி மற்றும் மேலாண்மை

கால்நடைகள் மற்றும் கோழிகளை முடிந்தவரை இயற்கையான சூழ்நிலையில் பராமரிக்கப்பட வேண்டும். இதற்கு இயற்கை இனப்பெருக்க முறைகள், நல்ல கொட்டகை வசதி, மேலாண்மை முறைகள் மற்றும் நோய்களைத் தடுக்க சுகாதார மேலாண்மை ஆகியவற்றைப் பின்பற்ற வேண்டும். ஒவ்வொரு வகை கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கும் அதற்கு ஏற்றவாறு குறிப்பிட்ட கொட்டகை மற்றும் திறந்த வெளிப் பகுதி வேண்டும்.

இயற்கை முறை மாற்று காலம்

இயற்கை முறையில் பராமரிக்கப்படாத கால்நடைகளை இயற்கை முறை மாற்ற காலத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு வளர்க்கப்படும் காலத்தில் அவற்றை இயற்கை முறையில் பராமரிக்க வேண்டும். மாற்று காலம் முடிந்த பிறகு பராமரிக்கப்பட்ட கால்நடைகளை இயற்கை முறையில் வளர்க்கப்பட்டவை என்று விற்பனை செய்யலாம்.

தீவனம்

கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்படும் தீவனங்களே வழங்கப்பட வேண்டும். பயிரிடப்படும் தீவனமும் இயற்கை முறையிலேயே பயிர் செய்ய வேண்டும். கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு அளிக்கப்படும் தீவனம் ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும். தீவனத்தில் சேர்க்கப்படும் தீவன உபப் பொருட்களும் இயற்கை பொருட்களிலிருந்தே பெறப்பட வேண்டும்.

உடல் நலத்திற்கு மூலிகை வைத்யம்

மேலாண்மை, ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரத்தை சரிசெய்வதன் மூலம் உற்பத்தி , கருவுறுதல் மற்றும் உடல்நலப் பிரச்சனைகளை சரி செய்ய வேண்டும். நுண்ணுயிர் கொல்லிகள் (ஆன்டிபயாட்டிக்) மற்றும் அலோபதி மருந்துகளை பயன்படுத்திக் கூடாது. சிகிச்சைக்கு மூலிகை அல்லது மரபுசார் மூலிகை மருத்துவ முறைகள், ஹோமியோபதி அல்லது ஆயுர்வேத தயாரிப்புகளைப் பயன்படுத்த வேண்டும். அவற்றால் குணப்படுத்த முடியாதவற்றிற்கு அலோபதி மருந்துகளைப் பயன்படுத்தலாம். அவ்வாறு பயன்படுத்தினால், பயன்படுத்தப்பட்ட மருந்துகள் உடலில் தங்கும் காலத்தை பின்பற்றி கால்நடைப் பொருட்களை பயன்படுத்த வேண்டும். ஹார்மோன் சிகிச்சை மற்றும் வளர்ச்சி ஊக்குவிப்பிகளைப் பயன்படுத்தக் கூடாது. தேவைப்படும் தடுப்பூசிகளை போட்டுக் கொள்ளலாம்.

இனப்பெருக்கம் மற்றும் மேலாண்மை

இயற்கை முறை இனப்பெருக்கத்தை பின்பற்ற வேண்டும். இருப்பினும் செயற்கை கருவூட்டலையும் பயன்படுத்தப்படலாம். உடலியல் சிக்கலை சரிசெய்வதற்காக மட்டுமே கரு பரிமாற்ற நுட்பங்கள் மற்றும் ஹார்மோன் பயன்படுத்தப்படலாம். மரபணு பொறியியலைப் பயன்படுத்தும் இனப்பெருக்க நுட்பங்கள் பயன்படுத்தப்படாது.

உரம் மற்றும் சிறுநீர் மேலாண்மை

இயற்கை முறை கால்நடை மற்றும் கோழிப் பண்ணையில் உரம் மற்றும் சிறுநீர் மேலாண்மை ஒரு முக்கியமான பங்கு வகிக்கிறது. கொட்டகை, மேய்ச்சல் பகுதிகள் மற்றும் திறந்த வெளியில் இருந்து சாணம் மற்றும் சிறுநீர் சேகரிக்கும் பொழுது மண் மற்றும் நீர் நிலைகள் மாசுபடாமலும், தரம் குறையாமலும், ஊட்டச்சத்துக்களை மறுசுழற்சி செய்யும் வகையிலும் இருத்தல் வேண்டும். எக்காரணம் கொண்டும் எந்தப் பொருட்களுக்கும் தீ வைத்தல் கூடாது. இயற்கை முறைக்கு முரணான எந்தவொரு நடைமுறையையும் பின்பற்றக் கூடாது.

போக்குவரத்து

போக்குவரத்தின் போது விலங்குகள் போக்குவரத்து நல விதிப்படி கால்நடைகளுக்கு பசி, தாகம், காயம், உடல் வலி போன்றவைகள் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டும். போக்குவரத்திற்கு தேவையான

அனைத்து ஏற்பாடுகளையும் முன்னதாகவே செய்ய வேண்டும். கால்நடைகளை ஏற்றி இறக்கும் போதும் எந்த ஒரு காயமும் ஏற்படாமல் இருக்கும்படி வசதிகள் செய்ய வேண்டும்.

இறைச்சிக்காக வெட்டுதல்

இறைச்சிக்காக பயன்படுத்தப்படும் கால்நடைகள் அந்தந்த இனங்களுக்கு நிர்ணியக்கப்பட்ட குறைந்தபட்டிச வயதை பின்பற்ற வேண்டும். இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள் மற்றும் கோழிகள் பிராந்திய மற்றும் தேசிய விதிகளின்படி துன்பத்தைக் குறைக்கும் விதத்தில் இருக்க வேண்டும்.

டாக்டர் விவேக் குல்கர்னி
கால்நடை மருத்துவக்கல்லூரி
நாமக்கல்

வாசகர் வட்டம்

கத்தியால் குத்து பட்ட மாட்டுக்கு/ கழிச்சலுக்கு

கத்தியால் குத்து பட்ட மாட்டுக்கு மத்தான் தைலம் போட்டு குணமாகிவிட்டது. (ஊமத்தை இலை, தேங்காய் எண்ணெய், மயில் துத்தம் சேர்த்து காய்ச்சியது). வயிறு உப்பிசம், கழிச்சலுக்கு கால்நடை மூலிகை முதலுதவி பெட்டியில் உள்ள கழிச்சல் மருந்து 20 கிராம் (கடுக்காய், ஆவாரம், சுக்கு, ஓமம், இந்துப்பு சேர்ந்தது) வெல்லம் 100 கிராம் சேர்த்து கொடுத்தேன். குணமாகிவிட்டது.

பாத்திமா
இடும்பாவனம், திருத்துறைபூண்டி தாலுகா
திருவாரூர் மாவட்டம்

மாட்டுக்கோமியத்தின் மகிமை

எனது மனைவி கடந்த 1992 லிருந்து சர்க்கரை சத்து நோயினால் கஷ்டப்பட்டிருந்தார்கள் ஆரம்பத்தில் நெல்லிக்காய்சாறு, சோற்றுக்கற்றாழை, பாகற்காய் சாறு கொடுத்து சில வருடங்கள் நன்றாக இருந்தார்கள். பின்னர் மீண்டும் சர்க்கரையின் அளவு 400க்கு மேல் கூடி போய்விட்டது. இதற்கு ஆங்கில வைத்யம் இன்சுலீன் போட்டு மாத்திரை சாப்பிட்டு 6 மாதத்தில் சரியாகிவிட்டது. ஆனால் மீண்டும் சர்க்கரையின் அளவு கூடி விட்டது. இதற்கு இயற்கை வைத்யம் செய்து குணமானாலும் முழு நிவாரணம் கிடைக்கவில்லை. கடைசியில் எங்களிடமுள்ள நாட்டு மாட்டு கோமியம் (ஓங்கோல் ஜாதி பசுவிலிருந்து எடுத்தது) கொடுத்து வருகிறேன். நித்தம் 50 மி.லி காலையில் சாப்பிட்டு வர சர்க்கரை அளவு ஒரு மாதத்திலேயே 160க்கு குறைந்துவிட்டது. தற்சமயம் மாட்டு கோமியம் தொடர்ந்து அருந்திவருகிறார். இருப்பினும் கோமியம் அருந்துவதற்கு அருவருப்புபடுகிறார்.

அந்தோணிசாமி, சிந்தாமணி
புளியங்குடி, தென்காசிமாவட்டம்
தொலைபேசி எண்– 9443582076

மஞ்சளுக்கு இயற்கை விவசாயம்

நான் 11/2 ஏக்கரில் மஞ்சள் சாகுபடி செய்கிறேன். மஞ்சளுக்கு இயற்கை விவசாயம் செய்து வருகிறேன். ஜீவாமிருதம் கரைசல் தயார் செய்து மாதம் 3 தடவை வாய்க்கால் நீரில் கலந்து விடுகிறேன். ஒரு தடவைக்கு 50 லிட்டர் ஜீவாமிருதக்கரைசலை நீரில் கலந்து விடுகிறேன். இத்துடன் அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, ட்ரைக்கோடெர்மா விரிடிஸ் கலந்து விடுகிறேன். இத்துடன் 10 நாட்களுக்கு ஒரு முறை பூச்சி விரட்டி, பஞ்சகவ்யா, பூச்சி விரட்டி+ பஞ்சகவ்யா சேர்ந்து அடித்து வருகிறேன். என்னுடைய பயிர் செம்பொறியான் என்ற நோய் தாக்குதல் அவ்வளவாக இல்லை. மற்ற விவசாயிகள் இதற்கு இரசாயன மருந்துகளை பயன்படுத்தி பணத்தை செலவு செய்கின்றனர். நான் இன்னும் 20 நாட்களுக்குள் அறுவடை செய்ய உள்ளேன். இத்துடன் என்னிடம் பச்சை மஞ்சளும் தேவையானோர்க்கு கொடுத்து வருகின்றேன். இயற்கையான மஞ்சள் தேவைப்படுவோர் என்னுடன் தொடர்பு கொள்ளலாம்.

கே.எம். செல்லமுத்து
கருக்கம்பாளையம், ஊஞ்சலூர் அஞ்சல்
ஈரோடு மாவட்டம். செல் –9486602389

காங்கேயம் நாட்டு மாடுகள் விற்க வாங்க தொடர்பு செல்:
அருள்முருகன்–8610487147
விஜய்–9894467728

நம்வழி வேளாண்மைக்கு சந்தா விவரம்

	வருட சந்தா ரூபாய்	ஆயுள் சந்தா ரூபாய்
நூலகங்கள் / நிறுவனங்கள் / கல்லூரிகள்/ கம்பெனிகள்	200	2000
விவசாயிகள் / தனிநபர்கள்	150	1500
தனிப்பிரதி	30	----
15 வருட பிரதிகளின் தொகுப்பு (பைண்டிங் செய்தது ரூ. 1250)	1500	----

+ (கொரியர் செலவு ரூ. 250)

சந்தா தொகை மணியார்டர் அல்லது பாங்க் டிராப் மூலம் "சேவா"
மதுரை என்ற பெயரில் எடுத்துக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
வங்கியின் பெயர் –யூனியன் பேங்க் ஆப் இந்தியா சேவா
மதுரை – கோச்சடை கிளை 45, டி.பி.எம் நகர், விராட்டிபத்து
SB A/C No – 493902010004241 மதுரை – 625016
IFSC Code : UBIN0549398 தொலைபேசி : 0452–2380082 , 2380943

அறிவைத்தேடும் நடை பயணம்

இடம்: பரமக்குடியிலிருந்து இராமேஸ்வரம் வரை

நாள் : 22.05.2020 லிருந்து 27.05.2020 வரை

இதில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள்
கீழ் கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளலாம்

சேவா, 45, டி.பி.எம். நகர்
விராட்டிபத்து, மதுரை –625016
தொலைபேசி : 0452–2380082, 2380943

Printed by A. Palaniappan at
Vivekananda Press
G-4, Industrial Estate, Madurai - 7

Published and Edited by
P. Vivekanandan on behalf of
SEVA
45. T.P.M. Nagar
Virattipathu
Madurai - 625 016
(0452) 2380 082, 2380943
Email : vivekseva@gmail.com
website : www.sevango.in

பெறுநர்

நூல் அஞ்சல்